RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE BUYING · SELLING · LEASE · PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com www.aaxelinsurance.com
AAXEL

மலர்:- 30, 23 யூன் 2023 இதழ்:- 09

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! யூலை மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

எமது இனிய வாசகர்களே! உங்கள் அபிமான ஈழநாடு எதிர்வரும் யூலை 07, 14 திகதிகளில் வெளிவராது. 21 யூலை 2023 வெள்ளிக்கிழமை வழமை போன்று வெளிவரும். அதேவேளை முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின் உணவளிக்கும் செயற்பாடுகள் வழமை போன்று தவறாது நடைபெறும். (01 யூலை முதல் 21 யூலை வரையான உணவளித்தோர் விபரங்களும் ஒளிப்படங்களும் 21 யூலை 2023 வெளிவரும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம். தொடர்புகளுக்கு 416 841 9600

# பொருளாதார மீட்சியுடன் மோதும் நல்லிணக்க அரசியல்!



மேற்குலக வலையில் இருந்து நழுவிச் செல்வதற்கு இலங்கை அளவுக்கு தந்திரோபாயமான நாடாக இருக்கிறது. சுதந்திரத்திற்குப் பின்னரான அதன் அரசியல் மற்றும் பொருளாதாரப் பயணம் பல விபத்துக்களையும் காயங்களையும் எதிர் கொண்டது என்பதில் சந்தேகமில்லை, இதனால் நாட்டிற்கு வேறு வழியின்றி சர்வதேச நாணய நிதியத்தின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இலங்கை மீட்சியடைந்து வருவதாக நாணய நிதியம் அபிவிருத்தியடைந்து வரும் உலகின் ஏனைய பகுதிகளுக்கு காட்ட விரும்புகிறது. ரணில் விக்கிரம சிங்க இந்த பிரிவின் தலைமை செவிலியராக செயற்படுகிறார், அவரை நிரந்தரமாக வைத்திருக்க சர்வதேச நாணய நிதியம் விரும்புகிறது.(17ம்பக்கம் பார்க்க)

# காணாமல் போனோரின் கதியை வெளிப்படுத்துங்கள்! சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் வலியுறுத்து!



காணாமல் போனோரின் குடும்பத்தினர் நீண்டகாலமாக அனுபத்து வரும் துன்பத்துக்கு உடனடியாகத் தீர்வை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரியிடம் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற் கொண்டிருந்த சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் ஆசிய, பசுபிக் பிராந் தியத்துக்கான பணிப்பாளர் கிறிஸ் டின் சிபோல்லா (5ம் பக்கம் பார்க்க)

# இந்தியாவின் புதிய பிரதமராக தமிழர்?

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins Manulife Foresters

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct: 416-624-7971 Office: 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)

“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487


THINKING OF
SELLING OR BUYING A HOME?
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
Team SIVA
WILL BRING THE BEST RESULTS!
Piravien Siva
B.Comm. Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com
20 Years Real Estate Experience
HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
HOMELIFE HIGHER STANDARDS
Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
Kingston Rd & Bellamy
Scarborough $499,999
Bedrooms: 2 Washrooms: 1
Renovated Kitchen & Bath condo
Birchmount Rd & Finch Ave
Scarborough $499,999
Bedrooms: 3 Washrooms: 2
Well Maintained Building & Clean
Markham & Eglinton
Scarborough $549,900
Bedrooms: 2 Washrooms: 2
Location!! Location!! Location!
Dundas/Hurontario St
Mississauga $599,000
Bedrooms: 3 Washrooms: 2
High Demand Layout Within Building
Ryerson/Victoria
Niagara Falls $687,000
Bedrooms: 4+1 Washrooms: 4
Fantastic Investment Potential
King St & Queen St
Hamilton $699,900
Bedrooms: 2 Washrooms: 2
Located Downtown Hamilton
Liverpool & Bayly
Pickering $749,999
Bedrooms: 2 Washrooms: 2
Beautifully Maintained, Upgrades
Potter Dr & Millcreek Dr
Loyalist $780,000
Bedrooms: 4 Washrooms: 3
Brand New End Detached Home
Yonge St / Queens Quay
Toronto $929,000
Bedrooms: 2 Washrooms: 2
Over 973 Sqft Suite And Waterfront
Bayview & Major Mac
Richmond Hill $1,299,900
Bedrooms: 3+1 Washrooms: 4
Lots Of Upgrades!
Lakeshore Rd. & Victoria St.
Port Hope $1,325,000
Bedrooms: 4 Washrooms: 4
Corner Lot With Double Car Garage
Morningside & Finch
Scarborough $1,399,900
Bedrooms: 4+1 Washrooms: 3
Fully Renovated Detached Home
Meadowvale / 401
Scarborough $1,688,786
Bedrooms: 4+3 Washrooms: 5
Extensively Renovated
Tenth Line & 19th Line
Stouffville $1,750,000
Bedrooms: 5+1 Washrooms: 4
Brand New Field gate Home
Dixie Rd & Kingston Rd
FOR LEASE
Pickering $1,850
Bedrooms: 1 Washrooms: 1
Beautiful Recently Renovated
Commercial/Retail
Grey Highlands $7,200,000
Dollarama And Tim Hortons.
Newly Built Tim Hortons Building
PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# வடக்கு கிழக்கில் இராணுவம் வசமுள்ள காணிகளை விடுவிப்பதற்கு சரத்பொன்சேகா எதிர்ப்பு!



வடக்கு கிழக்கில் படையினர் கைப் பற்றி வைத்துள்ள பொதுமக்களின் காணிகளை அரசியல் தேவை கருதி விடுவிக்கப்படுவதை தாம் எதிர்ப்பதாக முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பின ருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா தெரிவித்துள்ளார்.

இன்று நாட்டை ஆட்சி செய்பவர்கள் மட்டுமன்றி பலர் போர் வீரர்களை மறந்து விடுகின்றனர். இப்போது சிலருக்கு போர் நடந்ததா என்று கூட தெரியாது. மொத்தத்தில் தற்போதைய அரசாங்கம் உட்பட எந்த அரசாங்க மும் போர்வீரர்களை கண்டு கொள்ள வில்லை. வடக்கு கிழக்கில் இராணுவ த்தின் தேவைக்காக கையகப்படுத்தப் பட்ட சில காணிகள் உள்ளன. இவ் வாறு கையகப்படுத்தப்பட்ட சில நிலங் களைத் திருப்பித் தரவும் வாய்ப்புள் ளது. ஆனால், அரசியல் நலன் கருதி அந்த நிலங்களை திருப்பி கொடுப் பதை ஏற்க முடியாது.

வடக்கு, கிழக்கில் வாக்குகளுக்காக பேராசை கொண்ட சக்திகளை குறை மதிப்பிற்கு உட்படுத்தும் மற்றும் தவறான இடத்தில் வைக்கும் போக்கு தற்போது காணப்படுகிறது. என்ன ஒரு கோழைத்தனமான செயல். நாங்கள் அவர்களுக்கு எதிரானவர்கள். தற்போதைய ஆட்சியே கோழைத்தன மானது. அருவருப்பானது. பலவீன மாக உள்ளது. அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய அறிவார்ந்த தலை வர் இந்த நாட்டிற்கு தேவை. அடுத்த அதிபர் தேர்தலில் போட்டியிடுவீர்களா என்று பலர் கேட்கிறார்கள், கேட்பது எளிது ஆனால் பதில் சொல்வது கடினம்.

சரியான தலைமையை தெரிவு செய்வ தற்கு நாட்டு மக்கள் தியாகங்களைச் செய்தால் அதற்கான முன்மொழிவு களை பரிசீலிக்க வாய்ப்பு உள்ளது. இருந்தாலும், வீட்டில் கண்ணாடி முன் பார்க்கும் போது எதிர்காலத்தில் நாட்டை வழிநடத்தக்கூடிய ஒரு தலைவரைக் காண்கிறேன்.

ரணில் விக்ரமசிங்கவிற்கு சல்யூட் அடிக்க முடியும் ஏனென்றால் முன்னாள் அதிபர் ராஜபக்சவை போல ஊழல்வாதி அல்ல, ஆனால் வரும் அதிபர் தேர்தலில் நான் அவருக்கு எந்த வகையிலும் ஆதரவளிக்க மாட் டேன், அவர் மேதை அல்ல, பலவீன மானவர் என்றார்.

# மாகாண சபைகளுக்கு இடைக்கால நிர்வாக முறை! விக்கினேஸ்வரனின் கோரிக்கைக்கு ரணில் தயார்?




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எமது கோரிக்கைக்கு அமைவாக மாகாண சபைகளை மையப்படுத்திய இடைக் கால நிருவாக முறைமையையே செயற்படுத்துவதற்கு நடவடிக்கை களை முன்னெடுத்து வருகின்றார் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ் வரன் தெரிவித்தார்.

இதனடிப்படையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியைச் சந்திக்கச் செல்வ தோடு தமிழரசுக்கட்சியும் எமது கோரிக்கையுடன் விரைவில் இணை ந்து கொள்ளும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்குள்ள மாகாண சபை களை மையப்படுத்திய இடைக்கால பொறிமுறை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கை மையப்படுத்தி தமிழ்த் தேசியக் கட்சிகள் 13 காணப் படுகின்றன. இதில் கஜேந்திரகுமார் தலைமையிலான அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸைத் தவிர ஏனைய கட்சிகள் 13ஆவது திருத்தச்சட்டத் தினை முழுமையாக நடைமுறைப்படு த்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட் டில் உள்ளன.

அந்த அடிப்படையில் தற்போது மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படாமையால் நாம் மாகாண ங்களுக்கான இடைக்கால நிர்வாக முறைமையொன்றை உருவாக்குவதற் குரிய பரிந்துரையொன்றை முன்னெடு த்திருந்தோம்.

இறுதியாக நடைபெற்ற சந்திப்பின் போது அந்த விடயம் சம்பந்தமாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய போது எமது கோரிக்கைகளை சாதக மாக பரிசீலிப்பதாக அவர் கூறியிருந் தார். அத்துடன் ஜனாதிபதியுடனான இறுதிச் சந்திப்பின் போது அவர் (ஜனாதிபதி) புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படமாட்டாது என்பதைத் தெளிவாகக் கூறியிருந்தார். அவரிடத் தில் உள்ள அதிகாரங்களுக்கு அமை வாக மாகாண சபைபனை இயங்கச் செய்டவதற்காக் கூறியிருந்தார். அத னைத் தான் தற்போது தமிழரசுக் கட்சியுடனான சந்திப்பின் போதும் ஜனாதிபதி கூறியிருக்கின்றார். ஆகவே அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்று மில்லை.

எம்மைப் பொறுத்தவரையில், நாம் 13ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள குறைப்பாடுகளை ஓரளவு நிவர்த்தி செய்யும் வகையிலான வரைவொன்றை தயாரித்து ஜனாதிபதியிடத்தில் கைய ளித்துள்ளோம். அதனை அவர் சாதக மாக பரிசீலிக்கின்றார். எம்முடனும் பேச்சக்களை முன்னெடுக்கின்றார்.

(20ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# சம்பந்தரின் கோபத்தால் ஆடிப் போன சிங்கள அதிகார மையம்?



இலங்கை தமிழரசுக் கட்சிக்கும் சிறிலங்கா அதிபர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையில் கடந்த வாரம் இடம் பெற்ற பேச்சுக்களின் போது, வழக்கத்துக்கு மாறாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தனது 90 ஆவது வயதில் அசாதாரணமாக சீற்றமடைந்தமை உற்று நோக்கப்படுகிறது.

சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளை கையாளும் விடயத்தில் பொறுமையை இழந்து விட்டோம், தொடர்ந்தும் ஏமாறத் தயார் இல்லை என இரா. சம்பந்தன் சீற்றப் பட்டபோதும், அதே போல உள்ளூரில் இதற்குரிய தீர்வை சிறிலங்கா அரசாங்கம் வழங்கத் தவறினால் அனைத்துலக சுயநிர்ணய சட்டத்தின் கீழ் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் ஒரு துருப்புச்சீட்டை அடித்த போதும், ரணில் விக்ரமசிங்க அதற்குரிய எதிர் வினைகளை முறையாக வெளிப்படுத்தவில்லை.

மாறாக அடுத்த மாதம்(ஜீலை) இறுதிக்குள் இரண்டு நாட்களுக்கு தொடர்ந்து பேச்சுக்களை நடத்தி முக்கியமான விடயங்களுக்கு தீர்வைக் காண்போம் என அவர் பதில் வழங்கியிருக்கிறார்.

அதற்கு பின்னரும் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு காணும் விடயத்தில் முன்னேற்றங்கள் இல்லா விட்டால் தன்னை குறை கூறிக் கொள்ளலாம் எனவும் தெரிவித்திருக்கின்றார். அத்துடன், சிறிலங்கா படைத்தரப்பிடம் சிக்கியுள்ள காணிகளை தமிழ் மக்களுக்கு மீண்டும் வழங்கும் வகையில் சிறிலங்கா இராணுவ பிரிகேடியர் ஒருவர் தலைமையில் அமைக்கப்படும் பணிமனை ஒன்றுக்கு தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவின் மகனை இணைப்பாளர் என்ற பொறுப்பில் அமர்த்தி விட்டால், பிரச்சினைகள் தீர்ந்து விடுமே என்ற கருத்தையும் அவர் பூடகமாக (கடந்த வாரம் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுடனான பேச்சின் போது) வெளிப்படுத்திக் கொண்டதான செய்திகள் கசிந்துள்ளன.

இதற்கிடையே, தமிழ் மக்களுக்கான தீர்வை சிறிலங்கா வழங்கத் தவறினால் அனைத்துலக சுயநிர்ணய சட்டமன்றத்தின் விடயத்தை இரா சம்பந்தன் தொட்டதும் ராஜபக்ச அதிகார மையத்திற்கு மூக்கில் வியர்வை வருகின்றது.

இதனால் தான் தமிழ் கட்சிகள் அனைத்துலக நாடுகளின் நிகழ்ச்சி நிரலில் நாட்டை குழப்பிக் கொள்ளாமல், உள் நாட்டில் அரசுக்கு நிபந்தனைகளை விதிக்காமல் பேச்சுகளை நடத்தி பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டுமென மஹிந்த ராஜபக்ச கூறுகிறார்.

ரணில் விக்ரமசிங்க என்று சிறிலங்காவின் முதன்மை தலையாடியாக இருப்பது போல, நாடாளுமன்றத்தில் ஒரு ஆசனத்துடன் இல்லாமல் அதில் பெரும்பான்மை பலத்துடன் இரண்டு தடவைக்கு கொலுவிருந்தவர் மஹிந்த ராஜபக்ச.

அவ்வாறாக சிறிலங்காவின் அதிபராக இருந்த மஹிந்த ராஜபக்ச தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் 18 சுற்று பேச்சுகளை நடத்தினாலும் இறுதியில் தமிழர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அதே மஹிந்த ராஜபக்ச தான் இப்போது அனைத்துலக நியமங்களின் படி தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரித்துக்கோரும் உரிமை இருப்பதாக பேசுபொருள் ஒன்று வந்தவுடன், தமிழர்கள் அனைத்துலக நிகழ்ச்சி நிரலில் நாட்டை குழப்புவதான விமர்சனத்தை முன் வைத்து சிங்கள மகா ஜனதாவுக்கும் ஒரு மறைமுகமான செய்தியை எறிய தலைப்படுகின்றார்.

ஆக மொத்தம், ராஜபக்சர்கள் இந்த மூக்கு வியர்வைக்கு மத்தியில் கடந்த மே தின உரையில் இந்த வருடத்தின் இறுதிக்குள் இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வு காணப்படும் என தெரிவித்த அதிபர் ரணில் விக்ரமசிங்க இப்போது அதனை இன்னும் முன்னகர்த்த தலைப் படுவதாக தெரிகின்றது



இதனால் தான் அவர் அடுத்த மாத இறுதிக்குள் சில விடயங்களில் தீர்வைக் காண்போம் என கூறத் தலைப்படுகின்றார். இதற்கிடையே ரணில் விக்ரம சிங்கவின் நெற்றிக்கு நேரே இரா.சம்பந்தன் சீற்றத்தை வெளிப்படுத்தியதான நகர்வு கூட சில உள்ளக சிக்கல் களுக்குரிய தற்பாதுகாப்பு ஆயுதமாகவும் நோக்கப்படக்கூடும்.

தற்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிளவுபட்டமை யாதார்த்தம். எதிர்வரும் தேர்தலில் தமிழரசுக் கட்சி கடுமையாக உரசப்படலாம் என்ற ஊகங்கள் உள்ளன. இதற்கிடையே, கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை மையப்படுத்திய சிறிலங்காவின் நகர்வுகளும் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு சில ஆதாயங்களை வழங்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால் இரா. சம்பந்தன் தனது தற்காப்பு ஆயுதத்தை தொடுவதாக நோக்கப்படுகிறது.




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

## ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

25 யூன் 2023 ஞாயிற்றுக்கிழமை– ஆனி உத்தரம்
உபயம்:– லோகநாதன் (பாபு) சாந்தி குடும்பம்

30 யூன் 2023 வெள்ளிக்கிழமை – பிரதோஷ விரதம்

02 யூலை 2023 ஞாயிற்றுக்கிழமை – பௌர்ணமி விரதம்
14 யூலை 2023 வெள்ளிக்கிழமை – பிரதோஷவிரதம்
16 யூலை 2023 ஞாயிற்றுக்கிழமை – அமாவாசை விரதம்
17 யூலை 2023 திங்கட்கிழமை – ஆடிப்பிறப்பு

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# காணாமல் போனோரின் கதியை வெளிப்படுத்துங்கள்! சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் வலியுறுத்து!



காணாமல் போனோரின் குடும்பத்தினர் நீண்டகாலமாக அனுபத்து வரும் துன்பத்துக்கு உடனடியாகத் தீர்வை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியிடம் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற் கொண்டிருந்த சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் கிறிஸ்டின் சிபோல்லா மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று கடந்த வார இறுதியில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது இலங்கையில் வாழும் அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த காணாமல் போனோரின் குடும்பத்தினர் அனுபத்து வரும் துன்பத்துக்குத் தீர்வை வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

காணாமல்போன தமது அன்புக்குரியோருக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியாமல் அவர்களது குடும்பத்தினர் பெரும் துயரத்தை அனுபவித்துவருவது குறித்து கிறிஸ்டின் சிபோல்லா அமைச்சர் அலி சப்ரியிடம் எடுத்துரைத்தார்.

எனவே காணாமல் போனோருக்கு என்ன நேர்ந்தது, அவர்களின் விதி என்ன என்ற பதிலை அவர்களது குடும்பத்தாருக்குத் தெரியப்படுத்தும் செயன்முறை உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

அத்தோடு இச்செயன்முறைக்கு பக்கச்சார்பற்ற நடுநிலையானதும், சுயாதீனமானதுமான மனிதாபிமானக் கட்டமைப்பு என்ற ரீதியில் செஞ்சிலுவை சங்கத்தினால் வழங்கப்படக்கூடிய ஒத்துழைப்பு தொடர்பாகவும் அவர் இதன்போது பிரஸ்தாபித்தார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் அலி சப்ரி, இது மிகக்கடினமான நீண்ட பயணம் என்று சுட்டிக்காட்டியதுடன், இனங்களுக்கிடையிலான பாலத்தைக் கட்டியெழுப்புவதுடன் கடந்தகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்கும் அதேவேளை அனைத்து இலங்கையர்களும் சுயகௌரவத்துடனும் பாதுகாப்பாகவும் வாழக்கூடிய எதிர்காலத்தை முன்னிறுத்தி செயலாற்ற வேண்டும் என்று தெரிவித்தார்.

மேலும் பல்லினத்தன்மை என்பது ஓர் பலம் என்றும், அது பின்னடைவாக மாறுவதற்கு இடமளிக்கக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# ஜனாதிபதி - பொதுஜன பெரமுன இடையே முறுகல்?

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்குமிடையிலான சந்திப்பில் முன்னாள் ஜனாதிபதியும் கட்சியின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியினால் மேற்படி கலந்துரையாடலிற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் உள்ளிட்ட சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் பொதுஜன பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சில அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டவர்களுடன் குறித்த சந்திப்பு இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை நாட்டின் ஒருமைப்பாட்டை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியால் மாத்திரமே பாதுகாக்க முடியும். ஜனாதிபதி பதவியையும், பாராளுமன்ற அதிகாரத்தையும் நாங்களே கைப்பற்றுவோம். தேர்தல் ஊடாக எமது பலத்தை மீண்டும் உறுதிப்படுத்துவோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார். நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் ஆட்சியதிகாரத்தை ஏற்கவும் அதிகாரத்தை துறக்கவும் ராஜ பக்ஷாக்கள் தயாராகவே உள்ளார்கள். 2022 ஆம் ஆண்டு தவறான சித்தரிப்புக்களினால் பாரிய அரசியல் நெருக்கடி ஏற்பட்டது. ஜனநாயக போராட்டத்தை ஒரு தரப்பினர் பயங்கரவாத போராட்டமாக மாற்றியமைத்தார்கள்.


அரசியலமைப்பின் பிரகாரம் இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்தோம். நெருக்கடியான சூழலில் நாட்டுக்காக எடுத்த அரசியல் தீர்மானம் சிறந்தது என்பதை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். எக்காரணிகளுக்காகவும் பொதுஜன பெரமுன தனது தனித்துவத்தை விட்டுக் கொடுக்கவில்லை. நாட்டின் ஒருமைப்பாட்டை ராஜபக்ஷர்கள் பாதுகாத்தார்கள் என்றார்.

# இந்தியாவின் புதிய பிரதமராக தமிழர்?

தமிழகத்தில் இருந்து பிரதமர் ஒருவர் தேர்வாக வேண்டும் என்ற பாரதிய ஜனதா கட்சியின் தலைவரும் அமைச்சருமான அமித் ஷாவின் பேச்சு அரசியல் வட்டாரத்தில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தமிழ்நாட்டில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று விட்டு டெல்லி சென்று விட்டார்.

முன்னதாக, டெல்லியில் இருந்து விமானம் மூலம் சென்னை வந்த அமித் ஷா, கிண்டியில் உள்ள நட்சத்திர விடுதியில், தமிழகத்தின் பல்வேறு துறைகளை சார்ந்த முக்கிய பிரமுகர்களை சந்தித்தார். அதன் தொடர்ச்சியாக, சென்னை கோவிலம்பாக்கத்தில் உள்ள தனியார் மண்டபத்தில், தென் சென்னை மக்களவைத் தொகுதி பாஜக நிர்வாகிகளுடன் அமித் ஷா கலந்துரையாடினார்.

அப்போது பேசிய அவர், தமிழ் நாட்டில் இருந்து 2 பிரதமர் களை கடந்த காலங்களில் தவற விட்டுள்ளோம். அதற்கு காரணம் திமுக தான். வரும் காலங்களில்



ஒரு தமிழரையாவது பிரதமராக்க உறுதி எடுப்போம் என பேசியதாக தகவல்கள் வெளியாகின. இதை யடுத்து, தமிழகத்தில் இருந்து பிரதமர் ஒருவர் தேர்வாக வேண்டும் என்ற அமித் ஷாவின் பேச்சு அரசியல் வட்டாரத்தில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. எடப்பாடி பழனிசாமி பிரதமராக வர வேண்டும் என அவரது தரப்பினர் கூறி வருகின்றனர். அண்ணாமலை பிரதமராக வர வேண்டும் என அவரது ஆதரவாளர்கள் பேசி வருகின்றனர். ஒவ்வொருவரும் தங்களுக்கு பிடித்த தலைவர்களை இது போன்று கூறி வருகின்றனர்.

இது குறித்து முதல்வர் ஸ்டாலின் கூறுகையில், தமிழரை பிரதமராக் குவோம் என்ற அமித்ஷாவின் அறிவிப்பு மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனால் அதன் உள்நோக்கம் புரியவில்லை. வெளிப்படையாக இந்தக் கருத்தை அவர் கூறி இருந்தால்

(22ம் பக்கம் பார்க்க)

# பேசிக் கொண்டே இருப்பதா?

மீண்டும் தமிழ் தேசிய கட்சிகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் பேச்சு இடம் பெற்றிருக்கின்றது. இது போன்ற பேச்சுகள் தொடர்பில் மக்கள் மத்தியில் துளியளவு கூட நம்பிக்கை காணப்படவில்லை தவிர, மக்கள் இது போன்ற விடயங்களை கரினையுடன் நோக்கவுமில்லை.

பேச்சுகளை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டுமாயின், அதனை எவ்வாறு எந்த அடிப்படை யில் முன்னெடுக்க வேண்டுமென்று 'ஈழநாடு' ஏற்கனவே தெளிவாகக் குறிப்பிட்டு வந்திருக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்க அரசியல் தீர்வு தொடர்பில் தெளிவான நிலைப்பாட்டுடன் வரவேண்டும் என்று சம்பந்தன் கூறியிருந்ததை மேற்கோள் காட்டி, ஏற்கனவே 'ஈழநாடு' முன்னைய தலையங்கத்தில் ஒருவேளை, ரணில் வராவிட்டால் தமிழ் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன அதேவேளை, அதனை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டுமென்றும் வலியுறுத்தியிருந்தது.

அரசாங்கம் விடயங்களை மாறி, மாறி பேசி வருகின்றது.

13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தி, அதிலிருந்து முன்னோக்கி பயணிப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேசியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து, எதிர்பார்க்கப்பட்டவாறே தென்பகுதியில் பௌத்த பிக்குகள் வீதிகளில் இறங்கி தங்களின் எதிர்ப்பை வெளியிட்டனர்.

அதன் பின்னர் தமிழ் கட்சிகளோடு இடம் பெற்ற சந்திப்பின்போது புதிய அரசியல் யாப்பு தொடர்பிலும் ரணில் பேசியிருந்தார்.

அரசமைப்பிலுள்ள விடயங்களையே அமுல்படுத்த முடியாதபோது, அதனையும் விட கூடுதல் அதிகாரங்களை வழங்கக்கூடிய புதிய அரசியல் யாப்பை எவ்வாறு கொண்டு வர முடியும்? இதற்கு எவரிடம் பதிலுண்டு? இதற்கிடையில் இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொறகொட அவ்வப்போது மாறுபட்ட அபிப்பிராயங்களை இந்திய ஊடகங்களுக்கு தெரிவித்து வருகின்றார்.

சில தினங்களுக்கு முன்னர் வடக்குக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கவுள்ளதான செய்தியொன்றை சிங்கள ஊடகமொன்று வெளியிட்டிருந்தது.

தற்போது, நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அவ்வாறான திட்டங்கள் எவையுமில்லை என்றும் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் எந்தவொரு உள்ளக கலந்துரையாடல்களும் நடைபெறவில்லை எனவும் விஜயதாஸ தெரிவித்திருக்கின்றார்.

இதுவரையில் அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்க மட்டத்தில் உரிய தீர்மானங்கள் எவையும் மேற்கொள்ளப்படவில்லையாயின், பேச்சுகளின் மூலம் அரசாங்கம் அடைந்து கொள்ள முயற்சிப்பது என்ன? வெறும் காலத்தை கடத்துவது மட்டும் தானா? இங்கு விடயம் 13ஆவது திருத்தச்சட்டம் பற்றியதோ அல்லது காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது பற்றியதோ அல்ல மாறாக, இதுவரையில் இடம் பெற்ற பேச்சுகள் மூலம் சாதிக்கப்பட்ட விடயங்கள் என்ன? எவையுமே இல்லையென்றால் பேசிக் கொண்டே இருப்பதன் பொருள் என்ன? ஒன்றில் 13ஆவது திருத்தச் சட்டத்தை புறம்தள்ளி விட்டு அதனை விடவும் மேலான கூடுதலான நன்மைகளை தமிழ் மக்களுக்கு வழங்கக் கூடியதொரு தீர்வு தொடர்பில் சிந்திக்கவேண்டும்.

அது தான் அரசாங்கம் விரும்புகிறது என்றால், அதற்கான அரசியல் உறுதிப்பாட்டை நிரூபிக்க வேண்டிய பொறுப்பும் அரசாங்கத்தின் பக்கத்திலேயே இருக்கின்றது.

ஒற்றையாட்சி நீக்கப்பட்ட சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வொன்றை காண வேண்டுமென்பது தானே தமிழ்த் தேசிய கட்சிகளின் நிலைப்பாடாகவும் இருக்கின்றது. ஆனால், முன்னேற்றத்தைக் காண்பிக்க வேண்டிய அதனை நிரூபிக்க வேண்டிய அரசாங்கமோ இதுவரையில் செயலில் எதனையும் நிரூபிக்காத நிலையில் பேச்சுகளை தொடருவதிலுள்ள பயன் தொடர்பில் தமிழ்த் தேசிய கட்சிகள் சிந்திக்கவேண்டும்.

அல்லது அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து கீழிறங்கி வரச் செய்யும் உத்திகள் தொடர்பில் சிந்திக்க வேண்டும். அல்லது வெளியாரின் உதவிகளை பெற்று முன்னோக்கி நகருவது தொடர்பில் சிந்திக்கவேண்டும்.

# மாகாண சபைக்கான ஆலோசனைக்குழு அமைக்கும் ஏற்பாடானது எங்களது நிலைப்பாட்டிற்கு குந்தகம் விளைக்கும் - சுரேந்திரன்



ஜனாதிபதியால் பரிந்துரைக்கப்பட்டு அல்லது முன்வைக்கப்பட்டிருக்கும் மாகாண சபைக்கான ஆலோசனைக் குழு ஒன்றை அமைக்கும் ஏற்பாடானது, ஏற்கனவே நாங்கள் கோரிக்கை வைத்திருக்கும், மாகாண சபை தேர்தலை நடாத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு குந்தகம் விளைவிப்பதாக அமைகிறது என ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் குருசாமி தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவ்வறிக்கையில் மேலும் உள்ளதாவது,

அரசியல் யாப்பிலே ஏற்கனவே இருக்கின்ற அதிகாரங்களை பகிர்ந்து, மாகாண சபை தேர்தல் சட்டத்தில் அதற்கான திருத்தங்களை மேற்கொண்டு பாராளுமன்ற அனுமதியை பெற்று மாகாண சபை தேர்தலை நடாத்துமாறு எமது கோரிக்கை அமைந்திருந்தது. அதை ஜனாதிபதியும் ஏற்றுக் கொண்டு, அந்த மாகாண சபையில் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீள நிலை நிறுத்துவதற்கான சட்ட வரைபுகளை தான் ஏற்பாடு செய்திருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

அந்த சட்ட வரைபுகளோடு தேர்தல் திருத்த சட்டத்தையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது அனுமதி பெற்று மாகாண சபைகளில் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீள நிறுத்தி, மாகாண சபை தேர்தலை நடாத்தலாம் என உறுதிமொழி வழங்கியிருந்தார். ஆனால் இதுவரைக்கும் அந்த விடயங்கள் தொடர்பான தெளிவான கருத்துக்கள் எதுவும் ஜனாதிபதியால் கூறப்படவில்லை.

இந்த நிலையிலே ஆலோசனைக்குழு ஒன்றை அமைத்து மாகாண சபையை வழி நடத்துவதற்காக ஜனாதிபதி எடுக்கின்ற முயற்சியும், அதை எமது தமிழர் தரப்பினரே அரசியல் கோரிக்கையாக முன்வைத்திருப்பதும் கவலையளிக்கிறது.

ஜனாதிபதியுடைய மாகாண சபை வழிநடத்தல் குழு என்பது அவரால் அமைக்கப்பட வேண்டிய ஒன்று, அதனை நாங்கள் வலிந்து கேட்பது அவசியமற்றது. அது ஏற்கனவே ஒரு நிர்வாகம் சம்பந்தப்பட விடயம். நாங்கள் கேட்பது அரசியல் நிலைப்பாடு. அதாவது மாகாண சபை தேர்தல்களை நடாத்த வேண்டும், பறிக்கப்பட்ட அதிகாரங்களோடு ஏற்கனவே இருக்கின்ற அதிகாரங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது ஒரு அரசியல் கோரிக்கை.

ஆகவே நாங்கள் இந்த அரசியல் கோரிக்கைக்கு புறம்பான ஒரு நிர்வாக ரீதியான ஆலோசனை சபையை அமைக்கும் விடயத்தை கோரிக்கையாக, அதாவது அரசியல் கோரிக்கையாக முன்வைப்பது அபத்தமானது ஆகும். அது ஜனாதிபதி அவருடைய தேவை கருதி எடுக்க வேண்டிய நடவடிக்கை. ஆகவே நாங்கள் எங்களுடைய நிலைப்பாட்டில் இருக்க இருக்க வேண்டியதில் அனைத்து தமிழ் தரப்பும் உறுதியாக இருக்க வேண்டும்.

மாறாக தனித்து செயற்பட முற்படுகின்ற போது, எமது பிரதான கோரிக்கையான அதிகாரப் பகிர்வு, மாகாண சபை தேர்தலை விரைந்து நடாத்துதல் என்ற விடயங்களுக்கு இவை குந்தகம் விளைவிக்கும் சூ ழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி, தேர்தல்களைப் பிற்போடுவதற்கு இதைப்பயன்படுத்துகின்ற அபாய சூழ்நிலை இப்போது எழுந்திருக்கிறது. இதற்கு சம்பந்தப்பட்ட அரசியல் தரப்பினர் பொறுப்பு கூற வேண்டும் என்பது எங்களது நிலைப்பாடு என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும்
கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை
நடாத்தும் 12வது ஆண்டு
இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை
தொடர்புகளுக்கு:- 416 841 9600

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# மதச் சுதந்திரம்:- ஞானம் பெறும் தருணம்



நாட்டில் மதவெறுப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதிலும், மதச்சுதந்திரத்தை உறுதிசெய்து நல்லிணக்கத்தை பேணுவதிலும் பெருந்தேசியம் என்றுமில்லாத அதீத அக்கறையை வெளிப்படுத்தி வருகின்றது. புதிய சட்டமூலம் ஒன்றைக் கொண்டு வரும் முயற்சிகளும் இடம் பெறுகின்றன. இது அடிப்படையில் பாராட்டுதலுக்கு உரியது.

இலங்கையில் இஸ்லாமிய மதம் இழிவுபடுத்தப்பட்டு முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்புப் பிரசாரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்ட போதிலும் ஏனைய மதச் சிறுபான்மையினரை மட்டம் தட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வேளையிலும் எழுத்தில் இருக்கின்ற சட்டங்களைக் கூட சரியாக அமுல்படுத்தத் தவறிய அரச இயந்திரம் இன்று பௌத்த மதம் கேலிக்குள்ளாக்கப்பட்டவுடன் கண்விழித்து எழுந்திருக்கின்றது.

ஞானசார தேரர் உள்ளிட்ட கடும்போக்கு துறவிகள் மற்றும் அமைப்புக்கள் வெறுப்புப் பிரசாரங்களை மேற்கொண்ட போது, சிங்கள அரசியல்வாதிகள் பலர் நல்லிணக்கத்திற்கு எதிராக பேசிய தருணங்களிலும் வராத மதச்சுதந்திரம் பற்றிய ஞானம், இப்போது ஜெரோம் பெர்ணான்டோ, நடாஷா போன்றோரின் வெறுப்புப் பேச்சுக்களையடுத்து பிறந்திருக்கின்றது என்றும் கூறலாம்.

இந்நாட்டில் மதச்சிறுபான்மையினர் மத, இன அடையாளத்தினால் பாகுபாடு காட்டப்பட்ட ஏராளமான சந்தர்ப்பங்களில், எழுத்தில் உள்ள சட்டங்களைக்கூட சரிவர நடைமுறைப்படுத்தாத அரச அதிகாரிகளும், பெருந்தேசியமும், இப்போது புதிய சட்டமூலம் ஒன்று தேவை என்ற நிலைப்பாட்டுக்கு வந்து நிற்பது ஆச்சரியமானது தான். ஆனாலும் நல்லதொரு மாற்றமாகும்.

இனவாதத்திற்கு தமது கொல்லைப்புறத்தில் வளர்த்தவர்களின் முட்டுக் கொடுத்தலிலேயே ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் தற்போது இருக்கின்றது. ஆயினும், அதனையும் தாண்டி அரசாங்கத்திற்கு மதசுதந்திரத்தை உறுதிப்படுத்த ஒருகாத்திரமான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்ற உத்வேகம் பிறந்தமையானது கவனிப்பிற்குரியது.

காலம் கடந்தாவது இந்த ஞானம் பிறந்திருக்கின்றது என்பது ஆறுதலான விவகாரம் என்றாலும் கூட, இந்த ஞானம் பிறந்திருக்கின்ற தருணம், இதற்குப் பின்னால் இருக்கக் கூடிய சூட்சுமங்கள் பற்றி பல கேள்விகளும் சந்தேகங்களும் எழுவது இயல்பானது.

இலங்கையில் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் இருந்து இனவாதம் இருந்து வந்திருக்கின்றது. சுதந்திரத்திற்குப் பிறகு அதுவும் 80களிற்குப் பிறகு மதரீதியாக மக்களை நோக்குகின்ற போக்கு உருவானது எனலாம். கடந்த இரு தசாப்தங்களுக்குள் இது வேறொரு பரிணாமத்தை எடுத்துள்ளது என்றும் சொல்ல முடியும்.

இலங்கையில் இனப்பாகுபாட்டுக்கு அடிப்படையான சித்தாந்தங்களை அநகாரிக தர்மபால போன்றோர் தோற்றுவித்தனர் எனக்கருதினால், பிற்காலத்தில் சம்பிக்க ரணவக்க போன்றோர் அதனை புதுப்பித்தனர் எனலாம். இன்றும் சரத் வீரசேகர உள்ளிட்ட கணிசமான அரசியல்வாதிகள் இன நல்லிணக்கத்திற்கு குந்தகமான கருத்துக்களை கூறி வருகின்றனர்.

அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய சாணக்கியன் எம்.பி., மஹிந்த ராஜபக்ஷ அலரிமாளிகையில் வைத்துப் ஆற்றிய உரைகூட வெறுப்புப் பிரசாரம் என்பதை மறந்து விடக்கூடாது என்று சுட்டிக் காட்டியிருந்தமை நினைவு கொள்ளத்தக்கது. இவ்வாறான ஆயிரம் வரலாற்றுப் பதிவுகள் உள்ளன.

ஜீலைக் கலவரம் பல்வேறு பின்புலங்களைக் கொண்டது என்று எடுத்துக் கொண்டாலும் அதற்குப் பின்னரான திகண, அளுத்கம, அம்பாறை மற்றும் வடமேல் மாகாணத்தில் இடம்பெற்ற கலவரங்கள் நேரடியாக முஸ்லிம்களை இன ரீதியாகவும் மதரீதியாகவும் இலக்கு வைத்தவையாக காணப்பட்டன என்பது உலகறிந்த விடயமே.

முஸ்லிம்களை அடக்கி ஒடுக்கும் நோக்கில் பல கட்டுக் கதைகள் சோடிக்கப்பட்டன. கருத்தடைக் கொத்து, கருத்தடை மாத்திரை, கருத்தடை செய்யும் வைத்தியர் என்று பெரும் புரளிகள் கிளப்பி விடப்பட்டன. இதன்மூலம் முஸ்லிம்களும் அவர்களது இன அடையாளம் மற்றும் பொருளாதாரமும் குறிவைக்கப்பட்டன.

சமகாலத்தில், 'இஸ்லாமிய மார்க்கம் பயங்கரவாதத்தை போதிக்கின்றது' என்றும், பள்ளிவாசல்களில் அதற்கான பயிற்சி வழங்கப்படுகின்றது என்றும் அடிப்படையற்ற பரப்புரைகளை ஞானசார தேரர் உள்ளிட்ட பலபௌத்த தேரர்களும் கடும்போக்கு அமைப்புக்களும் முன்னெடுத்தன.

சஹ்ரான் குழு என்ற மிலேச்சத்தனமான கும்பலின் பயங்கரவாத தாக்குதலானது இப்பிரசாரத்திற்கு சாதகமாகிப் போனது. இத்தனைக்கும், இலங்கையின் அரசியலமைப்பிலேயே இன, மத சுதந்திரம் உள்ளடங்கலாக அனைத்து விதமான சுதந்திரங்களையும் உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் இருந்தன. பிரயோகிக்கத்தக்க சட்டங்களும் இருந்தன. ஆனால், முஸ்லிம்களுக்கு எதிரான இந்த வெறுப்பு நடவடிக்கைக்கு எதிராக அந்தச் சட்டங்கள் நேர்மையான முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதுவெல்லாம் இன, மத வெறுப்பு நடவடிக்கைகள் எனவே இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும்' என்று இப்போது போல அப்போதைய ஆட்சியாளர்களோ, பெருந்தேசிய அரசியல்வாதிகளோ இந்தளவுக்கு ஆக்ரோசமாகப் பேசவில்லை. புதிதாக ஒரு சட்டம் தேவை எனக்கூறவில்லை. மாறாக, முஸ்லிம்களுக்காக அல்லது தமிழர்களுக்காக பேசியவர்கள் குறிவைக்கப்பட்டதே நடந்தது.

எல்லா சமயங்களும் சமமானவையே. ஒவ்வொரு மார்க்கத்திற்கும் உரிய அங்கீகாரமும் சம உரிமையும் வழங்கப்பட வேண்டும். ஒரு பல்லின நாட்டில் எனது சமயம்தான் உயர்ந்தது என்று பேசுவதற்கு இடமளிக்கக் கூடாது. அது வேண்டத்தகாத விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகும்.

அந்த வகையில், புனித பௌத்த மதத்தை இழிவுபடுத்திய ஜெரோம் பெர்ணான்டோவுக்கும், நடாஷா எதிரிசூரியவுக்கும் அதேபோன்று நடாசாவின் கருத்துக்களை பகிர்ந்த புருனே திவாகரா ஆகியோருக்கு எதிராக சட்டம் துரிதகதியில் பாய்ந்திருக்கின்றமை பொதுவாக நாட்டு மக்களுக்கு ஆறுதலிக்கின்ற செய்தி என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்த தருணத்தில் சில வரலாற்று சம்பவங்களை திரும்பிப் பார்க்க வேண்டும். அதாவது, இதற்கு முன்னர் அரசியல்வாதிகள், பௌத்த துறவிகள், கடும்போக்கு அமைப்புக்கள் இன, மதவாதத்தை கக்கிய போது, எழுத்தில் இருந்த சட்டம் நடைமுறைக்கு வரவில்லை. இவர்களைப் போல அவர்களும் கைது செய்யப்படவில்லை. அவ்வாறு கைது செய்யப்படாதது ஏன் என்ற கேள்வியை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரும் எழுப்பியுள்ளமை இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமன்றி, மேற்குறிப்பிட்ட வெறுப்புக் கருத்துக்களை சமூக வலைத்தளங்களில் பலர் பகிர்ந்தது மட்டுமன்றி பல தேசிய ஊடகங்களும் பகிரங்கமாக ஒரு முக்கிய செய்தியைப் போல தொடராக வெளியிட்டன. (22ம் பக்கம் பார்க்க)

## சந்தர்ப்பங்களைக் கையாளுதல்?

தமிழ் கட்சிகள் ரணில் விக்கிரமசிங்கவோடு பேசி வருகின்றன. சிலதினங்களுக்கு முன்னர் சம்பந்த னின் வேண்டுகோளுக்கு இணங்கவும் சந்திப் பொன்று இடம்பெற்றிருந்தது.

இதன் போது ரணில் விக்கிரமசிங்கவின் பதில், தமிழ் கட்சிகள் என்ன கோருகின்றன என்பதற்கு அப்பால் தான் இதனைத்தான் செய்ய விரும்புகிறேன் என்றவாறு பதிலளித்திருக்கின்றார்.

இதேவேளை விக்னேஸ்வரனால் பரிந்துரைக்கப்பட்ட ஆலோசனை சபையை பரிசீலிக்கவுள்ளார் என்றும் கூறியிருக்கின்றார்.

இதேவேளை, விக்னேஸ்வரன், பிரதமர் தினேஸ் குணவர்த்தனவுடன் தனியாகவும் பேசி வருகின்றார். இதன் மூலம் பிரேமதாஸவால் மாகாண சபையிலிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களைத் திரும்பப் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளதாகவும் கூறி வருகின்றார்.

ஆனால், விடயங்களை ஆழமாக நோக்கினால் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் தமிழ் மக்கள் நன்மைகளை பெறக்கூடிய வாய்ப்புகள் ஏராளம் அதனை நாம் தவறவிட்டு விடக் கூடாது என்னும் ஒரு கருத்து அரசியல் மேற்பரப்புக்குக் கொண்டு வரப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில் தமிழ்க் கட்சிகள் வெளிப்படையாக தன்னை ஆதரித்தாலும் அல்லது ஆதரிக்காவிட்டாலும் கூட தமிழ் மக்கள் தனக்கே வாக்களிப்பார்கள் என்றே நம்புவது போன்றே தெரிகின்றது.

ஏனெனில், 2005இல் பகிஷ்கரிப்பை மேற் கொண்டு ரணிலுக்கு நெருக்கடியை ஏற்படுத்தக் கூடிய வல்லமையுடன் இப்போது எவரு மில்லை.

அதேவேளை ஜனநாயக முறைமைக்கு மாறான வழிமுறைகளில் தமிழ்க் கட்சிகளால் பயணிக்கவும் முடியாது. ஏனெனில், தமிழ் கட்சிகளை காத்திரமான அரசியல் சக்தியாக ரணில் கருதுவதாகத் தெரியவில்லை.

அதேவேளை தமிழ் கட்சிகள் மத்தியில் ஒருங்கிணைந்த செயல்பாடுகள் இல்லை என்பதும் அதற்கான முயற்சிகளில் ஈடுபடக்கூடிய நிலையில் கட்சிகளின் தலைமைகள் இல்லை என்பதும் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரியும்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஏனைய சிங்கள கட்சிகளின் தலைவர்களுக்கு உள்ள அடிப்படையான விடயம் ரணில் தமிழ் சூழலின் பலம் பலவீனத்தை நன்கறிந்த ஒருவர்.

ஜனாதிபதி தேர்தலை முன்வைத்து ரணில் காய்களை நகர்த்திக் கொண்டிருக்கும் போது, தமிழ் கட்சிகளும் ஜனாதிபதி தேர்தலை முன் வைத்தே தங்களின் தந்திரோபாயத்தை வகுக்கவேண்டும்.

ஏனெனில், ஜனாதிபதி தேர்தல் தமிழர் தரப்புக்குப் பேரம் பேசுவதற்குக் கிடைக்கும் ஒரு துருப்புச் சீட்டாகும்.

2015இல் ஏற்பட்ட ஜனாதிபதி தேர்தல் தமிழர் தரப்புக்கு மிகவும் சாதகமாக இருந்தது. ஆனால் அதனை சரியாகப் பயன்படுத்திக் கொள்வதில் சம்பந்தன் தவறிழைத்தார்.

சூழ்நிலையை சரியாகப் புரிந்து கொள்ளாமல் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசி வாய்பை நழுவ விட்டார். இப்போது மீண்டுமொரு வரலாற்று சந்தர்ப்பம் கதவைத் தட்டுகின்றது.

அதனை ஆரத்தழுவி பயன்படுத்திக்கொள்வது தொடர்பில் தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத் தும் ஓரணியாக நிற்கவேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாமென்று தமிழ்த் தேசிய கட்சிகள் தங்களுக்குள் முதலில் சிந்திக்க வேண்டும்.

முல்லைத்தீவு
புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின்
வாழ்வுக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
12வது ஆண்டு
இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
29 ஒக்டோபர் 2023 ஞாயிறுக்கிழமை
தொடர்புகளுக்கு 416 841 9600

# ஜனாதிபதிக்கும் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளருக்கும் எதுவுமே தெரியாது என்று குருந்தூர் விகாரை தேரர் கடும் தாக்கு!

மஹா விகாரையின் காணி பரப்பளவு தொடர்பாக ஜனாதிபதி தெரிவித்திந்த கருத்து உண்மைக்கு புரம்பானது. அதேநேரம் தொல்பொருள் திணைக்கள ஆணையாளர் நாயகம் குருந்து விஹாரை தொடர்பாக எந்த அறிவும் இல்லாமலேயே ஜனாதிபதியுடன் கலந்துரையாடலுக்கு சென்றிருக்கிறார் என குருந்து விகாரை தலைமை தேரர் தெரிவித்தார்.

குருந்து விகாரை காணி தொடர்பாகவும் அங்கு தொல்பொருள் திணைக்களம் கைப்பற்றி இருக்கும் இடங்கள் தொடர்பாகவும் ஜனாதிபதி மற்றும் தொல்பொருள் திணைக்கள ஆணையாளர், தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் இடம் பெற்ற கலந்துரையாடல் தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் மஹாவிகாரையை விட குருந்து விகாரை விசாலமானதா என ஜனாதிபதியின் கேள்விக்கு ஆணையாளருக்கு பதில் சொல்ல தெரியாமல் இருந்திருக்கிறது.

அவர் குருந்து விகாரை பிரச்சினை ஏற்பட்ட காலத்தில் இருந்து இந்த விகாரையின் பரப்பளவு தொடர்பாகவோ இங்குள்ள பிரச்சினை தொடர்பாகவோ சரியாக ஆராய்ந்து பார்க்கவில்லை. குருந்து விகாரைக்கு அவர் வரும்போது தமிழ் மக்கள் பிரச்சினைப்படுத்துவார்களோ என அச்சத்துடனே இங்கு வந்து அவசரமாக சென்று விடுவார்.

அதனால் இந்த விகாரையின் காணி தொடர்பில் அவர் எந்த தயார் நிலையும் ஜனாதிபதியுடனான கலந்துரையாடலுக்கு சென்றிருக்கிறார்.



குருந்து விகாரையின் காணி தொடர்பில் தெரிவிப்பதாக இருந்தால், 1933 இல் வெள்ளையர் காலத்தில் குருந்து விகாரை தொல்பொருள் பாதுகாப்பு பிரதேசமாக 78ஏக்கர் நிலப்பரப்பாக அளவிட்டிருந்தது.

அதன் பின்னர் மேற் கொள்ளப்பட்ட பகுப்பாய்வுகளின் பின்னர் இன்னும் பல தொல்பொருள் கண்டு பிடிக்கப் பட்டதை தொடர்ந்து வவுனியா தொல்பொருள் காரியாலயத்தினால் தொடர்ந்து பல வருடங்களாக மேற் கொண்ட ஆய்வின் பின்னரே புதிய தொல்பொருள் இருக்கும் பிரதேசங்களை கண்டு பிடிக்கப்பட்டு எல்லை தூண்கள் நாட்டப்பட்டதால் அந்த பிரதேசத்திவ் 229 ஏக்கர் இருப்பதாக அறிந்து கொள்ள முடிந்தது. அதன் பிரகாரம் மொத்தமாக தற்போது சுமார் 310 ஏக்கர் காணிப்பரப்பு குருந்து விகாரைக்கு இருக்கிறது.

அப்படியானால் ஜனாதிபதி தெரிவிப்பது போல் மஹா விகாரை 100 ஏக்கரும் இல்லையா? ருவன்வெலி சாய, தூபாராமய, தேத்தவனாராமய, ஸ்ரீமா போதி இந்த பகுதிகளை எடுத்துக் கொண்டாலும் 500ஏக்கருக்கும் அதிகமாகும்.

அபயகிரி மற்றும் மற்ற இடங்களை எடுத்துக் கொண்டால் மஹா விகாரைக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் காணி இருக்கிறது. அதனால் ஜனாதிபதிக்கு இது தொடர்பாக வாசிக்கவும் தெரியாது. அதனை ஜனாதிபதிக்கு தெரிவிப்பதற்கு தொல்பொருள் ஆணையாளர் நாயகத்துக்கும் தெரியாது.

மேலும் அந்த பிரதேசத்தில் 100வ ருடங்களுக்கும் அதிக காலம் வயல் வேலை செய்ததாக சுமதந்திரன் எம்.பி தெரிவித்திருந்தார். அது அப்பட்டமான பொய் யுத்தத்துக்கு பின்னர் குருந்து விகாரையை சுற்றியுள்ள 50 ஏக்கருக்கும் அதிக காணியில் காடு அழிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று அண்மை காலத்தில் அந்த பிரதேசத்தில் காடு அழிக்கப் பட்டு வயல் வேலை செய்யப்பட்டு வந்தது. அந்த பிரதேசத்தை வனப் பாதுகாப்பு திணைக்களத்தினால் தடை செய்திருந்தது. தடையை மீறி செயற்பட்டவர்களுக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் தமிழ் மக்களுக்கு விவசாயம் செய்ய அந்த பிரதேசத்தில் காணி வழங்க வேண்டும் என்றிருந்தால், தொல்பொருள் இல்லாத இன்னும் 6 ஆயிரம் ஏக்கர் காணி அந்த இடத்தில் இருக்கிறது. அதில் இருந்து வழங்க முடியும். அதற்கு நாங்கள் எதிர்ப்பு இல்லை. ஆனால் தொல் பொருள் இருக்கும் இடங்களை வழங்க அனுமதிக்க முடியாது என்றார்.

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
12வது ஆண்டு இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
29 ஒக்டோபர் 2023 ஞாயிறுக்கிழமை
தொடர்புகளுக்கு 416 841 9600

கடன் தொல்லையா?
பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்
கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224, Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



நாய்க்கு எங்கு அடித்தாலும் அது காலைத் தூக்கிக் கொண்டு தான் ஊளையிடும். அதுபோன்று இலங்கையில் சரத் வீரசேகர என்ற அரசியல்வாதி இப்போது காணப்படுகிறார்.

பொலிசாரின் அத்துமீறல், படையினரின் காணி அபகரிப்பு, தமிழர் பிரதேசங்களில் சட்டத்தை மீறி புதிய விகாரைகளை நிர்மாணித்தல் என்பவற்றைக் கண்டித்து எவர் கருத்துக் கூறினாலும் அதை இனவாதமாக்கி ஊதிப் பெருப்பிப்பது இவர் வேலை.

கடற்படைத் தளபதியாகவிருந்து ஓய்வு பெற்ற இவர் கோதபாயவின் வியத்மக வட்டத்தினூடாக அரசியலுக்கு கொண்டு வரப்பட்டவர். எஜமான் காணாமல் போன பின்னரும் அந்த எஜமான் விசுவாசத்தில் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டிருக்க விரும்புபவர் இவர். கடந்த வாரம் இப்பத்தியில் குறிப்பிட்ட கே.எம்.பி.ராஜரட்ண, சிறில் மத்தியு, காமினி திசநாயக்க போன்ற இனவாதிகளின் ஒட்டுமொத்த வடிவமாக தம்மைக் காட்டிக் கொள்ள முனையும் இவரது நிகழ்கால எறிகல்லின் இலக்கு கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ.

கடந்த மாத முள்ளிவாய்க்கால் நினைவை முன்னிட்டு கனடிய பிரதமர் வெளியிட்ட அறிக்கையில் இலங்கையின் இனஅழிப்பு என்று குறிப்பிட்ட வார்த்தைப் பிரயோகத்தை இவரால் ஜீரணிக்க முடியவில்லை.

கனடிய பிரதமரின் அரசியல் உள்நோக்கம் கொண்ட பொய்யை எதிர்கொள்ள உடனடியாக இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென உரத்துக் குரல் கொடுத்துள்ளார் சரத் வீரசேகர. இதனை செய்யத் தவறினால் பல உலக நாடுகள் இனப்படுகொலை பிரகடனத்தை ஆதரிக்கும் என்பது இவர்

இனியும் எங்களை பேய்க்காட்ட வேண்டாம். உங்களின் செப்படி விளையாட்டை நாங்கள் அறிவோம்' என்பதை, அரசியல் நாகரிகமாக 'பொறுமையை நாங்கள் இழந்து விட்டோம். தொடர்ந்தும் நாங்கள் ஏமாறத் தயாரில்லை' என்று நேருக்கு நேர் நெற்றியடியாக சம்பந்தன் கூறியது கொஞ்சமும் எதிர்பார்க்காதது.

ஆனால், இதனை ஆச்சரியமாகவோ கோபமாகவோ ரணில் காட்டிக் கொள்ளவில்லை. மிகவும் அமைதியாக யூலை மாத இறுதிக்குள் இரண்டு நாட்கள் பேசி முக்கியமான விடயங்களுக்கு தீர்வைக் காண்போம் என்று கூறியவர், அதன் அடிப்படையில் அதற்குப் பின்னரும் தீர்வு காணாவிடின் என்னை நீங்கள் எப்படியும் பேசலாம் என்று கூறி



விவகாரத்துக்கு முடிவு கட்டினார். இந்த வருட றுதிக்குள் இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வு காணப்படும் என்று கடந்த மாதம் தெரிவித்த ரணில், இப்போது யூலை மாதத்தில் தீர்வு எட்டும் என்று கூறி சம்பந்தனை கூல்

தயாரில்லை என்று சம்பந்தன் கூறியது தமிழர்கள் மத்தியில் பரப்பப்பட்டு விட்டது. சம்பந்தன் எதிர்பார்த்ததும் நிறைவேறியிருக்கலாம்.

பசுத்தோல் போர்த்த சிங்கமான ரணிலையும் அவரது சாமர்த்திய ராஜதந்திர நகர்வையும், அவருக்கே இயல்பான செயற்பாட்டையும் அறிந்தவர்களுக்கு ஒன்று நன்கு புரியும். சிங்களத் தரப்பை மீறி, பௌத்த பீடத்தை எதிர்த்து தமிழருக்கு எந்தத் தீர்வையும் அவர் வழங்கப் போவதில்லை. இதனை அறிய வேண்டுமெனில் அண்மைய நாட்களில் சிங்களத் தரப்பில் வெளியான சில தகவல்களை உற்று நோக்க வேண்டும்.

கனடாவில் நீண்டகாலம் வாழ்ந்து வந்தவர் குகதாசன். இங்குள்ள தமிழர் அமைப்பொன்றில் பணி புரிந்தவாறு தமிழ் ஆசிரியராகவும் இருந்தவர். தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் தமிழரசுக் கட்சி ஆகியவற்றின் பிரதானியாக கனடாவில் செயற்பட்டவர். இக்கட்சிகளின் தேர்தலுக்கும் வேறு பணிகளுக்கும் நிதி

**பனங்காட்டான்**

சேகரித்து வழங்கி அந்த வட்டத்துள் முக்கியமானவராக தம்மை உயர்த்திக் கொண்டவர். ஆனால் கனடிய தமிழர்



வடமாகாண சபைக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் எதனையும் வழங்கும் தீர்மானம் இல்லையென்று அமைச்சர் விஜேதாச ராஜபக்ச கூறியுள்ளார்.

சமூகத்தில் இவருக்கு பெருமளவில் நற்பெயர் இருந்ததில்லை.

கடந்த பொதுத்தேர்தலில் எவ்வாறாவது எம்.பி.யாக வேண்டுமென்ற எதிர்பார்ப்பில் இலங்கை சென்று சம்பந்தனின் ஆசீர்வாதத்தோடு திருமலை மாவட்டத்தில் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டவர். தேர்தலில் வெற்றி கிடைக்கவில்லையாயினும் சம்பந்தனின் வலது கரமாக அதன் பின்னர் செயற்பட்டவர்.

# சம்பந்தனுக்கு வந்தது பொல்லாத கோபம்! ரணிலுக்கு எச்சரிக்கை! குகதாசனுக்கு கல்தா!

விடுக்கும் பயமுறுத்தல். இலங்கையின் அரசியல் கட்டமைப்புக்குட்பட்ட வடமாகாண சபை இனப்படுகொலை தீர்மானத்தை நிறைவேற்றியதை இவர் மறந்து விட்டார். ஒன்ராறியோ சட்ட சபை 2021ல் இதே பிரேரணையை நிறைவேற்றியரதையும், அதனை எதிர்த்து சிங்கள அமைப்புகள் தாக்கல் செய்த வழக்கை ஒன்ராறியோ உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்ததையும் இவர் மறந்து விட்டார்.

மகிந்த ராஜபக்ச, கோதபாய ராஜபக்ச உள்ளிட்ட ஆறு பேருக்கு போர்க்குற்ற அடிப்படையில் கனடா பயணத்தடை விதித்ததையும் இவர் மறந்து விட்டார். இராணுவ உயர் அதிகாரி சவேந்திர சில்வா உட்பட சில படை அதிகாரிகளுக்கு போர்க்குற்ற காரணத்தால் அமெரிக்கா தடை விதித்ததையும் இவர் மறந்துவிட்டார். ஜெனிவா மனித உரிமைகள் பேரவை போர்க்குற்றத்தை மையப்படுத்தி அங்கத்துவ நாடுகளின் ஆதரவுடன் தீர்மானங்களை நிறைவேற்றுவதையும் கூட இவர் மறந்துவிட்டார்.

தமது அரசியல் இருப்புக்காகவும் சிங்கள பௌத்த தலைமைக்காகவும் கனடிய பிரதமரை இவர் இலக்கு வைத்திருப்பது எந்தவகையிலும் பயனளிக்காது என்பதை தெரிந்து கொள்ள அதிக காலம் தேவைப்படாது.

இது ஒரு புறமிருக்க, தமிழரசுக் கட்சியினருக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் மீண்டும் ஆரம்பித்திருக்கும் சுத்துமாத்துப் பேச்சுவார்த்தையும், தமிழரசுக் கட்சிக்குள் இடம்பெறும் குத்துவெட்டு காய்நகர்த்தல்களும் அண்மைய நாட்களின் முக்கிய சமாசாரங்கள்.

ரணிலுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுகளின் போது திரு. சம்பந்தன் கோபத்தின் உச்சியில் கொதித்து கொப்பளிக்கக் காணப்பட்டார். 'ரணில் அவர்களே!

பண்ணியுள்ளார். இதனை எழுதும் போது, 1980களில் சாவகச்சேரி எம்.பி.யாகவிருந்த வி.என்.நவரத்தினம் அவர்களுக்கும், ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கும் இடையில் இ,டம்பெற்ற ஓர் உரையாடல் நினைவுக்கு வருகிறது. இதனை இப்பத்தி எழுத்தாளரிடம் நவரத்தினம் அவர்களே கூறியிருந்தார்.

'நீங்கள் தமிழர்களுக்கு எதிராக பல தடவை தொடர்ந்து கருத்துகளை தெரிவித்து வருவதால் எங்கள் மக்கள் உங்கள் மீதான நம்பிக்கையை இழக்கிறார்கள். உங்களுடன் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்துவதையும் அவர்கள் விரும்பவில்லை' என்று திரு. நவரத்தினம் தெரிவித்தபோது ஜே.ஆர்.ஜெயவர்த்தன அளித்த பதில் பின்வருமாறு இருந்தது.

'நீங்கள் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழில் ஆற்றும் உரைகளை சிங்கள பத்திரிகைகள் பிரசுரிக்கக்கூடாது. அது போன்று நான் சிங்களத்தில் சிங்கள மக்களுக்கு ஆற்றும் உரைகளை தமிழ் பத்திரிகைகள் பிரசுரிக்கக்கூடாது. நாங்கள் இருவரும் எங்கள் கட்சிகளின் வாக்கு வங்கியை காப்பாற்றவும், அதிகரிக்கச் செய்யவுமே இவ்வாறு பேசுகிறோம்' என்று ஜே.ஆர் சொன்னபோது தாம் வாயடைத்துப் போனதாக நவரத்தினம் எம்.பி. சொன்னார்.

தமிழரசுக் கட்சிக்கும் ரணிலுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் போது சம்பந்தன் சண்டமாருதமாக வீசிய எச்சரிக்கையையும் சவாலையும் ஜே.ஆர். கூறியது போன்று நோக்கினாலும் அதில் பிழையிருக்க முடியாது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிளவுபட்டு, தமிழரசுக் கட்சி தலைமைப் போட்டியில் பல கூறுகளாகி, தமிழரசின் வாக்கு வங்கி சிதறுண்டு போகும் நிலையில் அதனை காப்பாற்றுவதற்காகத் தான், பொறுமையை இழந்து விட்டோம், தொடர்ந்து ஏமாறத்

வடக்கு கிழக்கில் பௌத்த விகாரைகள் கட்டுவதை நிறுத்துவதாக எந்த முடிவையும் இதுவரை எடுக்கவில்லையென தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் அநுர முனதுங்க அறிவித்துள்ளார்.

பதின்மூன்றாவது திருத்தத்தை ரத்துச் செய்ய வேண்டுமென மகிந்த ராஜபக்ச அணியின் முக்கியஸ்தரான ரோஹண அபயகுணவர்த்தன கோரியுள்ளார்.

திருமலை மாவட்டத்தில் கூட்டமைப்பின் பட்டியலில் இரண்டாம் இடத்தில் வந்ததால் சம்பந்தனின் பின்னர் (?) தாமே எம்.பி. என்ற நினைப்பில், சம்பந்தனின் சுகவீனத்தை தமக்கு வசதியாக்கி சம்பந்தனுக்கு எதிரான சூழ்ச்சிகளில் ஈடுபட்டவர் குகதாசன் என்ற குற்றச்சாட்டு பரவலாக உண்டு. இவ்விடயங்களை நன்கு தெரிந்து கொண்டும் இதுவரை பொறுத்துப் பார்த்த சம்பந்தன், இனி முடியாதென்ற

**தமிழரசின் மூத்த தலைவர் சம்பந்தன் நீண்ட துயில் நீங்கி எழந்து விட்டார். இது அவரது கோப காலம் போலும். தொடர்ந்து தமிழரை ஏமாற்ற வேண்டாமென்று ரணிலை எச்சரித்துள்ளார்.**

**திருமலை மாவட்டத்தில் தமது வலதுகரமாக இயங்கிய கனடா குகதாசனுக்கு கல்தா கொடுத்துள்ளார். எய்தவன் இருக்க அம்பை மட்டும் வீழ்த்தி என்ன பயன்?**

மாகாண சபைகளுக்கு இப்போது தேர்தல் இல்லை. இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படலாமென அரச தரப்பிலிருந்து மெதுவாக ஒரு தகவல் கசிய விடப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்புகள் அன்று ஜெ.ஆர். சொன்னதுபோல சிங்கள மக்களுக்கானதல்ல. இது முற்றுமுழுதாக தமிழ் மக்களுக்கானது. இது தான் ரணிலின் அரசியல்.

அடுத்து, திருமலையின் எதிர்கால எம்.பி. என்று பரவலாகப் பேசப்பட்டு வந்த கனடா குகதாசனுக்கு நேர்ந்த கதி கடந்த சில மாதங்களாக எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. இதனால் பலருக்கும் இது ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை.

நிலைமையில் குகதாசனுக்கு கல்தா கொடுத்து விட்டார். தமது பிரத்தியேக இணைப்பாளராகவும், திருமலை மாவட்டத்தில் தமது கடமைகளை முன்னெடுக்கவும் திருமலை நகராட்சி மன்ற முன்னாள் தலைவர் என்.,ராசநாயகத்தை சம்பந்தன் இப்போது நியமித்துள்ளார்.

குகதாசனை இப்போது பற்கள் பிடுங்கப்பட்ட பாம்பாக தமிழரசுக்காரர்கள் பரிதாபத்தோடு பார்க்கின்றனர். சம்பந்தன் இப்போது தம்மீது வீசப்பட்ட அம்பை மட்டும் பிடுங்கி எறிந்துள்ளார். இந்த அம்பை எய்தவர் மீது எப்போது சம்பந்தன் கை வைப்பார்? அந்த நாளையே தமிழரசின் உள்வட்டத்தினர் ஆவலோடு எதிர்பார்க்கின்றனர்.

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி
# உறவுகளே! யூலை மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**
**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**
**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**
**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**
**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**
**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**
**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**
**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவு களே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

17 யூன் 2023 முதல 23 யூன் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ் வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சரோஜினிதேவி ஞானசேகர்

சுருவிலைப் பிறப்பிடமாகவும் கனடா ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களது இரண்டாம் ஆண்டு நினைவு நாள் 21 யூன் 2023 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு பாஸ்கரன் கனகரட்ணம்

வேலணைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பாஸ்கரன் கனகரட்ணம்) அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 15 யூன் 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு. பாஸ்கரன் கனகரட்ணம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் செஞ்சோலை இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நடராஜா கார்த்திகேசு

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 1ம் வட்டாரத்தை வதிவிடமாகவும் பாரிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நடராஜா கார்த்திகேசு அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 17 யூன் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லம் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.. அமரர் நடராஜா கார்த்திகேசு அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

Friends MATRIMONY

உங்கள் திருமணத் தேடலுக்கோர் முற்றுப்புள்ளி...

10,000க்கு மேற்பட்ட வரன்கள் கையிருப்பில்!

10,000+



இலங்கைத் தமிழர்களுக்கான உலகளாவிய திருமண இணையத்தளம்.

மணமகள் தேவை

கனடாவில் வசிக்கின்ற 30 வயது முதல் 45 வயது வரை வேளாளர், Mixed வேளாளர், கோவியர், குருகுலம் சார்ந்த, Diploma, Bachelor Degree, Master Degree வரை படித்த மணமகன்களுக்கு (Single/Divorced) பொருத்தமான வரனை எதிர்பார்க்கின்றோம். (FMID 112303, 120155 )

மணமகன் தேவை

கனடாவில் வசிக்கின்ற 29 வயது முதல் 34 வயது வரை வேளாளர், Mixed வேளாளர், கோவியர், குருகுலம், நளவர் சார்ந்த, Diploma, Bachelor Degree, Master Degree வரை படித்த மணமகள்களுக்கு (Single/Divorced) பொருத்தமான வரனை எதிர்பார்க்கின்றோம் (FMID 120110, 120151)

மணமகன் / மணமகள் தேவை

கனடாவில் வசிக்கின்ற 25 வயது முதல் 50 வயது வரையான (Catholic/Christian) Master Degrees வரை படித்த மணமக்களுக்கு (Single/Divorced) பொருத்தமான வரனை எதிர்பார்க்கின்றோம்.

• +1 647 709 1536
+1 416 477 6854
+1 416 477 2259
+94 77 591 2623

Mon to Fri
10AM to 7PM
Sat
1PM to 7PM


• GTA Square- 5215
Finch Ave. E. Unit 257
• friendsmatrimonym@gmail.com

www.friendsmatrimony.com

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




17 யூன் 2023 சனிக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வதிவிடமாகவும் பாரிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கார்த்திகேசு நடராஜா அவர்களது 9வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்





17 யூன் 2023 சனிக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வதிவிடமாகவும் பாரிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கார்த்திகேசு நடராஜா அவர்களது 9வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




18 யூன் 2023 ஞாயிற்றுக்கிழமை கரணவாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் மார்க்கம் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு மனோகரன் சுப்பிரமணியம் அவர்களது 65வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு மனோகரன் சுப்பிரமணியம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




19 யூன் 2023 திங்கட்கிழமை கனடா **Exeuitive woodwork Ltd** ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




21 யூன் 2023 புதன்கிழமை சுருவிலைப் பிறப்பிடமாகவும் ரொறன்ரோ கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




15 யூன் 2023 வியாழக்கிழமை ரொறன்ரோ கனடாவில் வசிக்கும் திரு ஜெகதீஸ்வரன் தம்பிராஜா அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு ஜெகதீஸ்வரன் தம்பிராஜா அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.








CANADA KANTHASWAMY TEMPLE
Presents
TSN EXPRESS
Vijay TV Super Singer
Sudarshan
Vijay TV Bigg Boss
Amuthavanan
Comedy Artist
Vijay TV Super Singer
Keshav
JUNE
24 - 25
AAROSAI
"WHERE MUSIC BEGINS..."
இசையில்
கார்த்திகேயன்
விழா
KAARTHIKEYAN FEST
Sun TV Actress
Deepthi
Host
இலங்கை - இந்திய - கனடிய கலைஞர்களுடன்
தென்னிந்திய திரை நட்சத்திரங்கள்....
சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள்
மற்றும் களியாட்ட நிகழ்வுகள்
விளம்பரம் மற்றும் வர்த்தகச்சாவடி
தொடர்புகளுக்கு
Muthu
+14162000792
Thana
+16478892710
Vijay TV Super Singer
Sushmita
Zee Tamil
Maathulani
Vijay TV Super Singer
Aparna
FREE ENTRANCE AND PARKING
கனடா கந்தசுவாமி கோவில் வாகனத்தரிப்பிட திறந்தவெளித்திடலில்

ஓம் சக்தி

# ஜெயதுர்க்கா தேவஸ்தானம் - மிசிசாகா

## சோபகிருது வருட மகோற்சவ விஞ்ஞாபனம்

விரவிநின்றொளிரும் வீரமும் துணிவும் மேதினி வாழ்பவர்க் கருளி
பறந்திடு விமானம் பதிந்து பின் இறங்கி பாங்குடன் ஏறிடும் வகையில்
தரைவழி கொண்ட மிசிசாகா பதியில் தான் நிலைத் தெம் மனம் கொள்ளும்
செருக்கழித்தாண்டு சீரருள்புரியும் ஜெயதுர்க்கை அம்பிகைத் தாயே.



| | |
|---|---|
| **கொடியேற்றம்** 02-07-2023 ஞாயிறு | **தேர்** 15-07-2023 சனி |
| **மஞ்சம்** 11-07-2023 செவ்வாய் | **தீர்த்தம்** 16-07-2023 ஞாயிறு |
| **சப்பறம்** 14-07-2023 வெள்ளி | **பூங்காவனம்** 18-07-2023 செவ்வாய் |

**அ**ம்பிகை அடியார்களே!

சகல வளங்களும் ஒருங்கே அமையப்பெற்ற கனடா நன்நாட்டில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் ஒன்ராரியோ மாநில மிசிசாகா மாநகரில் திருக்கோவில் கொண்டெழுந்தருளி வேண்டுவோர் வேண்டுவதை ஈய்ந்தருளும் ஜெயதுர்க்கா அம்பாளுக்கு மகோற்சவம் நிகழ திருவருள்கூடியுள்ளது. சோபகிருது வருடம் ஆனித் திங்கள் 18ம் நாள் (02-07-2023) மூல நட்சத்திரமும், பௌர்ணமி திதியும், அமிர்தசித்த யோகமும் கூடியுள்ள நன்நாள் ஞாயிறன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆனி மாதம் 32ம் நாள் (16-07-2023) ஞாயிறன்று தீர்த்த உற்சவத்துடன் 15 தினங்கள் திருவிழாக்கள் கலை நிகழ்ச்சிகளுடன் இனிதே நிகழ ஏற்பாடாகியுள்ளது. அன்பர்கள், அடியார்கள் அனைவரும் பகலும் இரவும் ஆலயத்திற்கு வருகை தந்து திருவிழா வழிபாடுகளில் கலந்து அம்பாள் அருள்பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வு வாழ்வீர்களாக.

**1808 Drew Road, Mississauga, Ontario L5S 1J6**
Telephone: 905-612-1856 • www.jeyadhurgatemple.ca


## கிரியா கால நிர்ணயம்



| | |
|---|---|
| அங்குரார்ப்பணம் 01-07-2023 : | சனிக்கிழமை காலை 9:30 மணிக்கு விநாயகர் வழிபாடு (கணபதி ஹோமம்), மாலை கிராமசாந்தி, பிரவேசபலி, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம். |
| கொடியேற்றத் திருவிழா 02-07-2023 : | ஞாயிற்றுக்கிழமை காலை 7:30 மணி காலை பூஜை 8:30 ஸ்நபன அபிஷேகம். 9:30 மணி மூலமூர்த்தி பூஜை. 10:15 பேரிதாடனம். 10:30 மணி வசந்தமண்டப பூஜை தொடர்ந்து சுவாமி எளுந்தருளல், ஸ்தம்ப பிரதிஷ்டை, படப்பிரதிஷ்டை, நண்பகல் 11:30 மணிக்கு கொடியேற்றம் (துவஜாரோகணம்), தொடர்ந்து நவசந்திஆவாகணம். விநாயகர், அம்பிகை வீதி உலா, அருட் பிரசாதம் வழங்கல். மாலை 4:30 மணி ஸ்நபனா அபிஷேகம், 5:15 மணி யாகபூஜை, 6:30 மணி மூலமூர்த்தி பூஜை தொடர்ந்து ஸ்தம்ப பூஜை. 8:00 மணி வசந்த மண்டப பூஜை, அம்பிகை வீதி உலா, அருட்பிரசாதம் வழங்கல். |
| இரண்டாம் திருவிழா 03-07-2023 : | திங்கட்கிழமை 8:30 மணி காலை பூஜை. 9:30 மணி ஸ்நபன கும்ப அபிஷேகம். பகல் 11:00 மணி மூலமூர்த்தி பூஜை. 11:30 ஸ்தம்ப பூஜை. நண்பகல் 12:00 மணி வசந்த மண்டப பூஜை, அம்பிகை வீதி உலா, அருட்பிரசாதம் வழங்கல். மாலை 5:15 மணி ஸ்நபன அபிஷேகம், 6:30 மணி மூலமூர்த்தி பூஜை தொடர்ந்து ஸ்தம்ப பூஜை. 8:00 மணி வசந்த மண்டப பூஜை, அம்பிகை வீதி உலா, அருட் பிரசாதம் வழங்கல். |
| 03-07-2023 முதல் 14-07-2023 வரை | இரண்டாம் திருவிழா முதல் பதின்மூன்றாம் திருவிழா (சப்பறத் திருவிழா) வரை பகல் இரவு உற்சவங்கள் ஒரே நேர அட்டவணைப்படி நடைபெறும். இரவு 7:30 - 8:00 மணி வரை கலை நிகழ்ச்சி |
| தேர்த்திருவிழா (இரதோற்சவம்) 15-07-2023 : | காலை 6:30 மணி காலைப் பூஜை. 7:00 மணி ஸ்நபனா அபிஷேகம், 8:30 மணி மூலமூர்த்தி பூஜை, தொடர்ந்து ஸ்தம்ப பூஜை, 10:00 மணி வசந்த மண்டப பூஜை, 11:30 மணிக்கு அம்பாள் சித்திரத் தேரில் அருட்காட்சி, தொடர்ந்து இரதபவனி இடம்பெறும். பிற்பகல் 1:30 மணி அம்பாளுக்கு பச்சைசாத்தி, இரதஅவரோகணம், தொடர்ந்து பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று அருட்பிரசாதம் வழங்கல். மாலை 7:00 மணி மூலமூர்த்தி பூஜை, ஸ்தம்ப பூஜை. 8:00 மணி வசந்த மண்டப பூஜை, அம்பாள் தேரடிபார்த்தல் உற்சவம், அருட்பிரசாதம் வழங்கல். |
| தீர்த்தத் திருவிழா 16-07-2023 : | ஞாயிறுக்கிழமை காலை 6:30 மணி காலைப்பூஜை, 7:00 மணி ஸ்நபன கும்ப அபிஷேகம் 8:30 மணி மூலமூர்த்தி பூஜை, ஸ்தம்ப பூஜை, பேரிதாடனம், சூர்னோற்சவம், தொடர்ந்து வசந்தமண்டப பூஜை, தீர்தோற்சவம். யாக மகாபூர்ணாகுதி, யாககும்ப அபிஷேகம், அருட்பிரசாதம் வழங்கல். மாலை 6:00 மணி மூலமூர்த்தி பூஜை, 6:30 மணி வசந்த மண்டப பூஜை தொடர்ந்து ஸ்தம்ப பூஜை, கொடியிறக்கம் (துவஜஅவரோகணம்). நவசந்தி விதர்சனம், மௌன உற்சவம், சண்டேஸ்வர உற்சவம், ஆச்சார்ய கௌரவம், ஆசீர்வாதம், அருட்பிரசாதம் வழங்கல். |
| 17-07-2023 : | திங்கள் - காலை 10:30 மணி பிராயச் சித்த அபிஷேகம் |
| 18-07-2023 : | செவ்வாய் - பூங்காவனம் - மாலை 5:30 மணி ஸ்நபன அபிஷேகம், 7:00 மணி இரவு பூஜை தொடர்ந்து பூங்காவனத்திருவிழா நடைபெற்று அருட்பிரசாதம் வழங்கல். |
| 21-07-2023 : | வெள்ளி (ஆடிப்பூரம்) - 7:00 மணி இரவு பூஜையைத் தொடர்ந்து வைரவர் மடை, அருட்பிரசாதம் வழங்கல் |





குறிப்பு: திருவிழாக்காலங்களில் காவடி, கற்பூரச்சட்டி (வெளி வீதிக்கு மட்டும்), மற்றும் பால்குடம் எடுக்க விரும்பும் அடியார்கள் தயவு செய்து ஆலயத்தில் முற்கூட்டியே பதிவு செய்யுமாறு வேண்டுகின்றோம். அத்துடன் அம்பிகைக்கான அபிஷேகப் பொருட்கள், பால், தயிர் போன்றன ஏற்றுக்கொள்ளப்படும்.

# வருடாந்த மஹோற்சவ பெருவிழா விஞ்ஞாபனம் 2023



## அருள்மிகு ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலயம்

**230 வில்கின்சன் சாலை, பிராம்ப்டன், ON L6T 4N7**

தொலைபேசி: **905-459-7042.** செல்: **416-615-0005**

Email: bramptonbhuvaneswari@gmail.com

அங்குச பாச மேந்தி அபயமே வரதம் தாங்கும்.
பங்கயக்கரத்தாள் பீதாம்பரமணியிடையாள் பொற்பூண்.
பைங்கள நிரம்பப் பூண்டாள்
பதினாறு கலையெழுத்துள்.
பொங்கிய ஒரெழுத்தாள் புவனேசி பாதம் போற்றி.

www.Bhuvaneswariamman.ca

ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் அடியார்களே! உலகின் பல்வேறு ஜீவராசிகள் உய்யும் பொருட்டு ஸ்ரீபிரம்மி மாகேஸ்வரி கௌமாரி வைஸ்ணவி வாராஹி இந்திராணி சாமுண்டா ஸப்த மாதர்களையும் ஒருங்கே கொண்டு ஆதியாய் அனாதியாய் ஒன்றாய் நீக்கமற ஸப்த லோகத்திலும் எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளாய் எல்லா வளங்களும் நிறைந்து கனடா நாட்டில், பிராம்ப்டன் நகரில் எழுந்தருளி அருள் பாலித்துவரும்

ஸ்ரீமாதா ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகை த்வஜரோகணம் தீர்த்த மஹோத்ஸவ உற்சவத்துடன் தொடங்கி பதினைந்து தினங்கள் பகலும் இரவும் திருவிழாக்கள் நிகழ அன்னையின் திருவருள் பாலித்துள்ளது.

நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் ஆனி 11ம் தேதி (25-06- 2023) ஞாயிற்றுக்கிழமை ஸப்தமி திதி உத்திர நட்சத்திரம் அமிர்த யோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 9.30 மணிக்குமேல் 11.00 மணிக்குள் துவங்கி அடியார்கள், தொண்டர்கள், உற்சவ உபயதாரர்கள் அனைவரும் சடங்குகளாக கீழே உள்ள பட்டியலில் உள்ள நிகழ்வுகளை அறிந்து, ஸ்ரீ புனேஸ்வரியின் பூரண அருள் பெற்று, சகல செல்வங்களையும் நீண்ட ஆயுளையும் பெற்று வளமுடன் வாழ அன்புடன் அழைக்கிறோம்.

**24-06-2023 சனிக்கிழமை மாலை: அனுக்ஞை கணபதி பூஜை கணபதிஹோம் கிராமசாந்தி, வாஸ்துசாந்தி. அங்குரார்ப்பணம், ம்ருத்ஸங்கிரஹணம். யாகசாலை நிர்மாணம் நடைபெறும்.**

| 25-06-2023 | 30-06-2023 | 07-07-2023 | 08-07-2023 | 09-07-2023 |
|---|---|---|---|---|
| ஞாயிறு | வெள்ளி | வெள்ளி | சனி | ஞாயிறு |
| கொடியேற்றம் | மஞ்சம் | சப்பறம் | தேர்த்திருவிழா | தீர்த்தம் |

## திருவிழாக்கால நிகழ்ச்சி நிரல்

### காலை திருவிழா
காலை 7.30 மணி காலசாந்தி பூஜை
காலை 8.30 மணி ஸ்நாபன கும்ப பூஜை, மூலவர். அபிஷேகம்
காலை 10.00 மணி உச்சிகால பூஜை. கொடிஸ்தம்பபூஜை
யாகபூஜை
மதியம் 11.30 மணி
வசந்தம்டப பூஜை. யாகசாலை தரிசனம்.
மதியம் 12.30 மணிக்கு பிரசாதம் வழங்குதல்

### மாலை திருவிழா
5.00 மணி: ஸ்தாபன கும்பாபிஷேகம்
6.30 மணி: மூலஸ்தான பூஜை, ஸ்தம்ப பூஜை
7.30 மணி: கலை நிகழ்ச்சிகள்.
8.30 மணி: வசந்தம் பூஜை.
அம்பாள் வீதியுலா நித்யாக்னி, யாகசாலை தரிசனம்
9.00 மணி: பிரசாதம் வழங்குதல்.

### சர்வபோதகம்
சிவமரத்னா: சிவஸ்ரீ.வி.எஸ். பாஸ்கர சிவாச்சாரியார்
மஹோற்சவ குருமார்கள்: சிவஸ்ரீ. மகேஸ்வர குருக்கள்
சிவஸ்ரீ. இராதாகிருஷ்ண குருக்கள்
சிவஸ்ரீ. கௌசிக் குருக்கள்

கனடாவாழ் குருமார்கள் அனைவரும் மஹோற்சவ காலங்களில் வருகை தந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் அழைக்கிறோம்
முக்கிய குறிப்பு :
தேர் தீர்த்தத் திருவிழா அன்று பால்குடம் மஞ்சள் குடம்
அங்கபிரதக்ஷணம் காவடி கற்பூர சட்டி எடுக்க விரும்புவோர் முன்பதிவுக்கு காரியாலத்தை தொடர்பு கொள்ளவும் 905-459-7042

தேவஸ்தான மங்கள இசை:
வித்வான். திரு சிவமயம் குழுவினர்.
புஷ்ப அலங்காரம், பூமாலைகள்:
திரு. அருந்தவராசா (Harini Foods)
திரு. பாலா (ஐஸ்வரியம் ஸ்டோர்ஸ்)
ஆலய நிர்மான ஸ்தபதி: விஸ்வபிரம்ம திரு. குணாளன்

என்றும் ஸ்ரீபுவனேஷ்வரி ஸம்ருதியில்
சிவமரத்தினம்: சிவஸ்ரீ. வி.எஸ். பாஸ்கர சிவாச்சாரியார்
ஸ்தாபகர், தலைமை அர்ச்சகர்
இல்லத்திருமணம் குடிபுகுதல்
சாந்தி பரிகாரப்பூஜைகளுக்கு அனுகவும்
416-615-0005

உங்கள் குடும்ப விழாக்களை கொண்டாட அழகிய மண்டபம் உள்ளது விபரங்களுக்கு ஆலயத்தை அணுகவும்

# மருதங்கேணியில் நடந்ததும் அதன் விளைவும்!

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -





புலனாய்வுத்துறை தமிழ்மக்களின் அரசியல் நடவடிக்கைகளைக் கண் காணிப்பது என்பது கடந்த பல தசாப்தகால யதார்த்தம். குறிப்பாக கடந்த 14 ஆண்டுகளாக தமிழ்க் கட்சி கள் மற்றும் செயற்பாட்டாளர்களின் எல்லா நடவடிக்கைகளையும் புலனாய் வுத்துறை கண்காணித்து வருகின் றது. அதை அவர்கள் நேரடியாகவும் செய்கிறார்கள் மறைமுகமாகவும் செய்கின்றார்கள். அச்சுறுத்தலாகவும் செய்கின்றார்கள் நாகரீகமாகவும் செய் கின்றார்கள். எதுவாயினும், தமிழ் மக்களைக் கண்காணிக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் மாற்றம் இல்லை. ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரும் நிலைமை அப்படித் தான் இருக்கிறது. தமிழ் மக்களை தொடர்ச்சியாகக் கண்காணி ப்புக்குள் வைத்திருப்பது என்பது ஆக்கிரமிப்பு மனோநிலை தான்.

மருதங்கேணியிலும் அது தான் நடந் தது. அதன் விளைவாக நடந்த கைது நடவடிக்கைகள் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியை அச்சுறுத்தும் நோக்கி லானவை. அண்மை மாதங்களாக முன்னணி அரசு படைகளோடும் போலீ சாரோடும் நேரடியாக முட்டுப்படும் போராட்டக் களங்களைத் திறந்து வருகின்றது. இதனால் ஆத்திர மடைந்திருக்கும் அரசபடைகளும் காவல்துறையும், முன்னணிக்கு அதன் வரையறைகளை உணர்த்தும் நோக் கத்தோடு மேற்படி கைது நடவடி க்கைகளை முன்னெடுத்திருக்கலாம். அக்கட்சியை அச்சுறுத்தி அதன் செயற்பாட்டாளர்களை தற்காலிகமாக வேனும் உள்ளே தள்ளுவதன் மூலம் அக்கட்சியை தொடர்ந்து போராட விடாமல் தடுப்பது அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கலாம். இது ஏற்க னவே சிறீதரனுக்கும் நடந்தது. அவருடைய இரண்டு உதவியாளர்கள் விடுவித்தது. சட்டத்தரணிகளையும் விட்டுவைக்கவில்லை. போராடப் போனால் கைது செய்யப்படலாம் என்ற ஒரு நிலையை ஏற்படுத்துவதே போலீ சின் நோக்கம்.

மருதங்கேணிச் சம்பவத்திலும் ஒரு புலனாய்வாளர் தன்னைத் தடுக்க முயன்ற கஜேந்திரக்குமாரைத் தட்டி விட்டுத் தப்பியோடுகிறார். அவரை இரண்டு கட்சிக்காரர்கள் தான் துரத் திக் கொண்டு போகிறார்கள். ஏனைய பொதுமக்கள் குறிப்பாக சந்திப்பில் கலந்து கொண்ட விளையாட்டுக் கழக த்தைச் சேர்ந்தவர்கள் யாரும் அவரைத் துரத்திக் கொண்டு போகத் துணியவில்லை.

அது ஒரு தமிழ் யதார்த்தம். அரச க்கு அந்தளவு போராட்டம் மக்கள் மயப்படும். ஆனால் தமிழ்க் கட்சிகளி டம் அதற்குரிய பொருத்தமான வேலைத்திட்டங்கள் இல்லை. அவ்வா றான ஒரு பின்னணியில் தான் நாடாளு மன்ற உறுப்பினர்கள் தனியாக அரசு தரப்புடன் முட்டுப்பட வேண்டி வரு கிறது.

மக்கள்முன்னணி அந்தப் பயத்தை உடைத்துக்கொண்டு போராட முயற்சி க்கின்றது. அதில் தனிமனித சாகசம் இருக்கலாம். எனினும், அக் கட்சிக்கு ஒரு தட்டுத் தட்டி அடக்க வேண்டும் என்று அரசாங்கம் சிந்தித்ததன் விளைவே மேற்படி கைது நடவடி க்கை. எல்லாவிதமான விமர்சனங்களு க்கும் அப்பால் தமிழ் அரசியலை வருகிறது.அது விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட கால கட்டம் ஒன்றில் அது தொடர்பாக டெலோ இயக்கமும் குமார் பொன்னம் பலமும் தெரிவித்த கருத்துக்களைக் கொண்ட ஒரு செய்திக் குறிப்பு. குமார் பொன்னம்பலம் புலிகள்இயக்கம் தடை செய்யப்பட்டமையை ஆதரித்து கரு த்து தெரிவித்திருக்கிறார். முன்ன ணியை விமர்சிக்கும் தரப்புகள் குமார் பொன்னம்பலத்தின் விசுவாசத்தைக் கேள்விக்கு உள்ளாக்கும் நோக்கத் தோடு மேற்படி பேப்பர் கட்டிங்கைப் பகிர்ந்து வருகிறார்கள்.

கடந்த 14 ஆண்டு கால தமிழ் அரசியலில் விகாரமாக மேலெழுந்து வரும் ஒரு போக்கு இது. தமது அரசியல் எதிரிகளுக்கு எதிராக சூழ்ச்சிக் கோட்பாடுகளை உருவாக்கு வது. முன்பு மொட்டைக்கடிதம் இருந்தது. இப்பொழுது புனை பெய ரில் முகநூல் கணக்கு உள்ளது. தமக்குத் தெரியாத ஒன்றைப் பற்றி கருத்துக் கூறும் சுதந்திரத்தையும் துணிச்சலையும் சமூகவலைத் தளங்கள் அதிகப்படுத்தியுள்ளன. அதனால் யானை பார்த்த குருடர்கள் எல்லாம் விமர்சகர்கள் ஆகிவிட்டார் கள். அவர்கள் ஒரு கூட்டமாகச் சேர்ந்து சமூக வலைத்தளங்களில் தமது அரசியல் எதிரிகளின் மீது அவதூறை அள்ளி வீசுகிறார்கள். குமார் பொன்னம்பலம் சம்பந்தப்பட்ட பேப்பர் கட்டிங்கை பரவலாக்குவதும் அதே சீரழிந்த விமர்சனப் பண்பாட்டின் ஒரு வெளிப்பாடு தான்.

ஆனால் அந்த விமர்சனப் பண் பாட்டை வளர்த்தெடுத்ததில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் பெரிய பங்கு உண்டு. தமது அரசியல் எதிரி களை இனத்துரோகிகளாக உருவகிப் பதன் மூலம் அவர்களின் ஆளுமையை சிதைக்கும் ஒரு அரசியல் விமர்சனப் பண்பாட்டை அக்கட்சி தான் அதிக மதிகம் முன்னெடுத்து வருகின்றது. யாராவது தமக்கு எதிராக எழுதினால் சோறு முக்கியம்'' அவர்களுக்குப் பசிக்குந் தானே'' என்றெல்லாம் எழுது வது அந்த கட்சிக்காரர்கள் தான். அரசியல் விமர்சகர்களை சில ஆயிரம் ரூபாய்க்கு கட்டுரை எழுதுபவர்கள் யுடியூ ப்பில் உழைப்பவர்கள் என்று எழுதுவதும் அந்தக் கட்சிக்காரர்கள் தான். தமிழ் அரசியலில் விமர்சனத்தை அவதூறாக மாற்றியதில் அக்கட்சி க்குப் பெரிய பங்குண்டு. இப்பொழுது அதேவிதமான அவதூறு அவர்கள் மீதும் அள்ளி வீசப்படுகிறது.

பயங்கரவாதத் தடைச்சட்ட்தின் கீழ் பிடிபட்டு பல மாதங்கள் சிறையில் இருந்தவர்கள்.

கடந்த 14 ஆண்டுகளாக ஆயுத மோதல்கள் இல்லை. எனினும் தமிழர சியல் அதிகம் இராணுவமயப்பட்டே காணப்படுகிறது. தமிழ்மக்கள் எந்த ஒரு போராட்டத்தை முன்னெடுத் தாலும் அரசபடைகளுக்கும் புலனாய் வுத் துறைக்கும், திணைக்களங்களு க்கும், பயங்கரவாதத் தடைச்சட்டத் திற்கு எதிராக போராட வேண்டியிரு க்கும். அவ்வாறு அரச படைகளோடு மோதி அல்லது முரண்பட்டு பயங்கர வாதத் தடைச்சட்டத்தின் கீழ் உள்ளே தள்ளுப்படுவதற்கு சாதாரண ஜனங்கள் அச்சப்படும் ஒரு சூழல் தான் இப் பொழுதும் உண்டு.

அண்மையில் தையிட்டியில் விகாரை க்கு எதிரான போராட்டத்தில் கஜேந் திரன் தனி ஒருவராக புதர்களின் மத்தியில் தரையில் உறங்கும் காட்சி அவருடைய ஆதரவாளர்களால் அதி கம் பகிரப்பட்டது.அ வர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். இருப தாயிரத்துக்கும் குறையாத வாக்கு களால் தெரிவு செய்யப்பட்டவர். அவர் ஏன் அங்கே தனியாக நிலத்தில் உறங்க வேண்டும்?

அவருக்கு வாக்களித்த மக்களும் அந்த கட்சியின் ஆதரவாளர்களும் எங்கே?அது உயர் பாதுகாப்பு வலை யத்தை அண்மித்த பகுதி. அங்கே சென்று போராடினால் கைது செய்ய படலாம் என்ற நிலைமை உண்டு. அவ்வாறு போராடிய கட்சிக்காரர்களை பலாலி போலீஸ் கைது செய்து பின் படைகள் மற்றும் போலீஸ் புலனாய்வுத் துறை போன்றவற்றோடு நேரடியாக மோத சாதாரண தமிழ்மக்கள் பயப் படுகிறார்கள்.ஏன் அதிகம் போவான். நினைவு நாட்களின் போது எல்லா ஆலய மணிகளையும் அடிக்குமாறு கேட்கப்படுகிறது. ஆனால் எல்லா கோவில்களிலும் மணி அடிக்கப்படுவ தில்லை. எல்லா வீடுகளிலும் வெளிப் படையாக ஒரு சுட்டி கூட ஏற்றப் படுவதில்லை. கட்சி அலுவலகங்களில் மட்டுந்தான் வெளிப்படையாக நினைவுச்சுடர் ஏற்றப்படும். சாதாரண ஜனங்கள் அவ்வாறு ஒரு சுட்டியை ஏற்றுவதற்குக் கூட பயப்படும் ஒரு நிலை.

அந்த அச்சத்தைப் போக்குவதென்றால் மக்களைத் திரளாக்க வேண்டும். உதிரியாக இருக்கும் வரை தான் அச்சமிருக்கும். ஆனால் பெரிய திரளாகக் கூடினால் எத்தனை பேரைத் தூக்குவது? போராட்டம் என்றாலே சட்டமறுப்புத் தான். சிறைகளை நிரப்புவது தான். பொதுமக்கள் அதிக மாகக் குவியும் போது எல்லாரையும் தூக்கி உள்ளே போடமுடியாது. உதிரியாகப் போராடும் போது தான் தனித் தனியாகத் தூக்கி உள்ளே போடலாம். திரளாகக் குவிந்தால் முழுச் சமூகத்தையும் உள்ளே தூக்கிப் போட முடியாது. உதிரிகளாக இருக்கும் வரை மக்கள் பயப்படுவர்கள். திரண்டால் அதுதான் பலம். திரட்சி தான் பயத்தைப் போக்கும். தைரிய த்தை உருவாக்கும். எனவே மக்கள் எந்தளவுக்கு எந்தளவு தங்களுடைய சௌகரிய வலையத்தை விட்டு வெளியே வருகிறார்களோ, அந்தளவு

அண்மை மாதங்களாக நொதிக்கச் செய்வது முன்னணிதான்.

அதேசமயம் மருதங்கேணிச் சம்பவத் தின் பின்னணியில் அக்கட்சியின் அரசியல் எதிரிகளும் கட்சியின் தூய்மை வாத நடவடிக்கைகளால் எரிச்சல் அடைந்தவர்களும் பின்வரும் விமர்சனங்களை முன்வைக்கின்றார் கள்... அது ஒரு நாடகம், முன்னணி வேண்டுமென்று முரண்பாடுகளை தோற்றுவிக்கின்றது. அதன் மூலம் தன்னுடைய ஆதரவுத் தளத்தைப் பலப்படுத்த முயற்சிக்கின்றது என்பது ஒரு பகுதியினரின் விமர்சனம்.

இன்னொரு பகுதியினர் முன்னணி யைப் பலப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு அரசாங்கம் மேற்படி கைது நடவடிக்கைகளை முன்னெடுத் திருப்பதாக விளக்கம் அளிக்கிறார்கள். இந்தியாவை எதிர்க்கும் ஒரு கட்சியை பலப்படுத்தினால் தமிழ்மக்கள் மத்தியில் இந்திய எதிர்ப்பை நிறுவனமயப்படு த்தலாம். அதனால் அரசாங்கத்தின் வேலை இலகுவாக்கப்பட்டு விடும். இரண்டாவதாக, தனது தூய்மைவாத நடவடிக்கைகளால் ஏனைய கட்சி களோடு இணைய மறக்கும் முன்ன ணியானது தமிழ் ஐக்கியத்துக்கு ஏதோ ஒரு விதத்தில் தடையாகக் காணப்படுகின்றது. எனவே அக் கட்சியை பலப்படுத்தினால் அது தமிழ்த் திரட்சியைப் பலவீனப்படுத் தும் என்று அரசாங்கம் சிந்திப்பதாக ஒரு விளக்கம்.

இவை தவிர, இக்காலப் பகுதியில் ஒரு பேப்பர் கட்டிங் முன்னணியின் அரசி யல் எதிரிகளால் அதிகமாக பகிரப்பட்டு

# விந்தணு தானத்தால் பிறந்த பெண் தனது தந்தையை தேடிய போது கிடைத்த அதிர்ச்சித் தகவல்!

ஈவ் வைலிக்கு அப்போது 16 வயது. அவர் விந்தணு தானம் மூலம் பிறந்தார் என்பது அப்போது தான் அவருக்குத் தெரிய வந்தது. அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் வசிக்கும் ஈவுக்கு இந்தத் தகவல் பெரும் ஆச்சரியத்தை அளித்தது. இதைத் தொடர்ந்து தனது உண்மையான தந்தை யார் என்பதை அறிந்து கொள்ளும் ஆவல் அவருடைய மனதில் எழுந்தது.

இந்த ஆர்வம் அதிகரிக்க, அதிகரிக்க அவர் பல விஷயங்களைத் தேடிப் பயணித்தார். இந்தப் பயணத்தில் அவர் அதிர்ச்சியூட்டும் தகவல்கள் பலவற்றை எதிர்கொள்ளும் நிலை ஏற்பட்டது. உண்மையில், குழந்தை பருவத்திலிருந்தே ஈவ் தனது தந்தையாகக் கருதி வந்த நபர், ஈவ் 7 வயதாக இருந்த போதே இதய நோய் காரணமாக உயிரிழந்து விட்டார்.

இதற்குப் பிறகு ஈவ் தனது 16வது வயதில் விந்தணு தானம் செய்த தந்தைக்கு அறிமுகமானார். அவரை அப்பா என்றும் அழைக்கத் தொடங்கினார். அது மட்டுமின்றி, தனது திருமணத்தின் போது, அவருக்கு தந்தைக்கு அளிக்க வேண்டிய மரியாதையையும், மதிப்பையும், அவருக்கான இடத்தையும் அளித்தார்.

ஆனால் பின்னொரு காலத்தில் ஈவின் மகனுக்கு உடல் நல பாதிப்பு ஏற்பட்ட போது தான் ஈவின் பிறப்பு குறித்த அதிர்ச்சி கலந்த உண்மைகள் அவருக்குத் தெரிய வந்தன. திரைப்பட கதையைப் போல் பல ஆச்சரியங்களைத் தாங்கி வரும் இந்தக் கதையை அவரே எழுதுகிறார். தொடர்ந்து படியுங்கள்.

நான் அப்போது கல்லூரி மாணவியாக இருந்தேன். அந்தக் காலகட்டத்தில் ஒரு நாள் என் அம்மாவின் மின்னஞ்சலின் இன்பாக்ஸை பார்க்க நேர்ந்தது. குறிப்பிட்ட காரணம் எதுவும் இல்லை என்றாலும், எதேச்சையாக நான் அந்த இன்பாக்ஸை பார்த்துக் கொண்டிருந்தேன்.

அதில், கலிஃபோர்னியா கிரையோபேங்க் என்ற மின்னஞ்சல் கணக்கில் இருந்து என் அம்மாவுக்குத் தொடர்ந்து பல மின்னஞ்சல்கள் வருவதை நான் கவனித்தேன். அதில் ஒரு மெயில் எனது பிறந்த நாள் குறித்த விவரங்களைத் தெரிவித்திருந்தது. அந்த மெயிலை பார்த்ததும், எனக்குத் தெரியாமல் ஏதோ ஒரு விஷயம் நடந்திருக்கிறது என்று என் உள்ளுணர்வுகள் தெரிவித்தன. இதைத் தொடர்ந்து, கூகுளில் கலிஃபோர்னியா கிரையோபேங்க் பற்றிய தகவல்களைத் தேடினேன். அப்போது அது செயற்கை கருவுட்டல் மையம் என்பது எனக்குத் தெரிய வந்தது.

அது மட்டுமல்லாமல், நானும் இதே மருத்துவமனையில் இருந்து விந்தணு தானம் பெற்று செயற்கைக் கருவுட்டல் மூலம் பிறந்தேன் என்பதை உணர எனக்கு அதிக நேரம் எடுக்கவில்லை. இதை உணர்ந்த பிறகு, நான் முதலில் கொஞ்சம் அதிர்ச்சியடைந்தேன். எனக்குக் குழப்பமாக இருந்தது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் சில ரகசியங்கள் இருக்கும். ஆனால் எங்கள் குடும்பத்தின் மிகப்பெரிய ரகசியமே `நான்' தான் என்பதை உணர்ந்தேன்.

என் தந்தையின் பெயர் டக். அவர் தான் எனது தந்தை என நான் நினைத்துக் கொண்டிருந்தேன். அவர் ஏற்கெனவே எனது இளம் வயதில் இறந்து விட்டதால், எனக்குத் தந்தை இல்லை என்றே நான் கருதியிருந்தேன். என் 16வது வயதில்தான் நான் விந்தணு தானம் மூலம் பிறந்தவள் என்பதே எனக்குத் தெரிய வந்தது. அதைத் தொடர்ந்து என் உண்மையான தந்தையைத் தேடத் தொடங்கினேன்.

என் 18வது வயதில் இந்தத் தேடுதல் முயற்சி தீவிரமடைந்தது. அம்மாவின் மருத்துவ ஆவணங்கள் மற்றும் என்னைப் பற்றிய வரலாறு அனைத்தையும் சரிபார்த்தேன். 1980களில் நான் என் தாயின் வயிற்றில் இருந்தேன். அந்தக் காலகட்டத்தில் அனைத்து மருத்துவமனைகளிலும் உள்ளூர் நன்கொடையாளர்களிடம் இருந்து மட்டுமே விந்தணு தானம் பெறப் பட்டு, பின்னர் செயற்கை கருவுட்டல் செய்யப் பட்டது.

இருப்பினும், விந்தணு தானம் செய்தவர் யார் என்பது குறித்து அதை ஏற்று கருவுறும் பெண்ணுக்கோ, பிற்காலத்தில் அவருக்குப் பிறக்கும் குழந்தைக்கோ தெரிவிக்கப்படுவதில்லை. சுருங்கச் சொன்னால், விந்தணு தானம் செய்தவர் யார் என்பது சட்டப்படி ஒரு ரகசியம். அந்தத் தகவல் யாருக்கும், எப்போதும் தெரிவிக்கப்படுவதில்லை.

கணவன், மனைவிக்கு இடையே செயற்கை கருவுட்டல் செய்யும் போதும், குறிப்பிட்ட ஓர் ஆணின் விந்தணுவை தனிப்பட்ட விருப்பத்துடன் ஒரு பெண் பெறும் போதும், அந்த ஆண்-பெண் என இருவருடைய சம்மதத்தின் பேரில் விந்தணு தானம் செய்தால் மட்டுமே, தானம் செய்தவர் யார் என்பது தெரிய வரும். விந்தணு வங்கிகளில் இருந்து அதைத் தானமாகப் பெறும்போது, தானம் செய்தவர் யார் என்பது ரகசியமாகவே வைக்கப்படுகிறது. உண்மையில், எங்கள் கிராமம் மிகவும் சிறியது. இருப்பினும், யாருடைய விந்தணு மூலம் நான் பிறந்தேன் என்பதைக் கண்டு பிடிப்பது, வைக்கோல் போரில் ஊசியைத் தேடுவது போன்றது.



மேலும், என் தந்தை யார் என்பதைக் கண்டு பிடிக்க நான் எங்கும் சென்று அலைந்து திரியும் நிலைமையும் இல்லை. எனவே விந்தணு தானம் பெற்ற மருத்துவமனை தரப்பில் இருந்து விசாரிக்க முடிவு செய்தோம்.

கலிஃபோர்னியா கிரையோபேங்கில், யாருடைய விந்தணு வேண்டும் எனத் தேர்வு செய்ய உங்களுக்கு உரிமை உள்ளது. விந்தணு தானம் அளிப்பவரின் உடல்நிலை, திறமைகள், பொழுதுபோக்கு, ஆர்வங்கள், கல்வி, இரத்தி பிரிவு மற்றும் பிற முக்கிய தகவல்களை நீங்கள் அறிந்துகொள்ள முடியும் என்றாலும், அவருடைய பெயரை நீங்கள் தெரிந்துகொள்ள முடியாது.

நாம் விரும்பும் குணாதிசயங்களுடன் கூடிய நபருடைய விந்தணுவை தேர்வு செய்து அதிலிருந்து செயற்கை கருவுட்டல் மூலம் குழந்தை பெறக்கூடிய நடைமுறை இது. விந்தணு தானம் பெற்றபோது, எனது அம்மா, 106 என்ற எண்ணைக் கொண்ட நபரின் விந்தணுவைவா தேர்வு செய்திருக்கிறார். அதற்கான ரசீதை என் அம்மா வைத்திருந்தார்.

முதலில் அந்த நபர் யார் என்று தெரிந்து கொள்ளும் ஆவல் மட்டுமே என்னுள் இருந்தது. ஆனால், பின்னர் அவரை என் தந்தையாகவே பாவித்து, அவர் முன் நிற்கவேண்டும் என ஓர் ஆசை எழுந்தது. இதையடுத்து, 106ஆம் எண்ணாகப் பதிவு செய்து விந்தணு தானம் செய்தது யார் என்பது பற்றி கலிஃபோர்னியா கிரையோபேங்கிடம் கேட்டேன். இந்த முயற்சியில் ஓர் ஆண்டு போராட்டத்துக்குப் பின் எனது தந்தையின் மின்னஞ்சல் முகவரி கிடைத்தது.

என் தந்தையின் பெயர் ஸ்டீவ், அயராத முயற்சிக்குப் பிறகு அவரை நான் உண்மையிலுமே கண்டு பிடித்தேன். அவர் மிகவும் நல்ல ஆளுமையாக இருந்தார். அதன் பின் அவரிடம், அமைதியான ஒரு நபரையும் என்னைக் கவனித்துக் கொண்ட ஒருவரையும் கண்டேன். இதை மிகவும் நல்லதொரு கனவாகவே உணர்ந்தேன். திகில் படங்களில் நீங்கள் பார்ப்பது போல் எனக்கு வேறு எதுவும் நடக்கவில்லை.

சில ஆண்டுகள் கழித்து எனக்கு திருமணம் நடந்தது. அந்த திருமணத்திற்கு அப்பா ஸ்டீவையும் அழைத்தேன். அவரும் இந்த திருமணத்தில் ஒரு தந்தையாக கலந்து கொண்டார்.ஓர் ஆண்டில் எனக்கு ஹட்டன் என்ற அழகான ஆண் குழந்தை பிறந்தது.



எல்லாம் மிகவும் நன்றாகத் தொடங்கியது. ஆனால் சில நாட்களிலேயே ஹட்டனுக்கு சில மருத்துவப் பிரச்சினைகள் இருந்தது எனது கவனத்துக்கு வந்தது. அவனுடைய உடலில் எப்போதும், எல்லா நேரத்திலும் ஏதோ ஒரு பிரச்சினை இருந்தது. அது என்ன பிரச்சினை என மருத்துவர்களால் கூட தெளிவாக கண்டறிய முடியவில்லை.

ஹட்டனுக்கு 3 வயதாக இருந்த போது அவருக்கு டிஎன்ஏ பரிசோதனை செய்தோம். அவனுக்கு மரபணு நோய் இருப்பதாக மருத்துவர் கூறினார். ஹட்டனுக்கு செலியாக் நோய் என்ற அரிய ஆட்டோ இமயூன் நோய் இருந்தது.

இது அவனுக்கு பரம்பரை நோயாக வந்ததாகவும் மருத்துவர்கள் கூறினர். என் மூலமாக அவனுக்கு இந்த நோய் வந்திருக்க வாய்ப்புள்ளது என்றும், ஆனால் சில காரணங்களால் அது என்னை பாதிக்க வில்லை என்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர். அதைக் கேட்டு நான் ஆச்சரியப்பட்டேன். ஏனென்றால் எனது குடும்பத்திலோ அல்லது தந்தை ஸ்டீவ் குடும்பத்திலோ எவருக்கும் இதுபோன்ற அறிகுறிகள் எதுவும் இல்லை. இதற்கிடையே, ஹட்டனின் டிஎன்ஏ எனது தந்தை ஸ்டீவின் டிஎன்ஏவுடன் பொருந்த வில்லை.

சோதனையின் போது ஹட்டனின் DNA உடன் பொருந்திய சிலரின் பட்டியலைக் கண்டேன். அப்போது என் அம்மா, இவர்கள் உன்னுடைய சகோதரர்களாக இருக்கலாம் இல்லையா?` எனக் கேட்டார். அதன் பிறகு அந்த நபர்களை கண்டு பிடிக்க முயற்சி செய்ய ஆரம்பித்தேன். அதில் ஒருவர் என்னை விட வயதில் மூத்தவர் எனத் தெரியவந்தது.

சில நாள் தேடலுக்குப் பிறகு எனது முயற்சி வெற்றியடைந்தது. எனது மகனின் டிஎன்ஏவுடன் பொருந்தியவர்களின் பட்டியலில் முதல் நபரை சந்தித்தேன். ஆனால் அந்த நபரின் பேச்சில் எந்த ஆச்சரியமும் இல்லை. (20ம் பக்கம் பார்க்க)

# பொருளாதார மீட்சியுடன் மோதும் நல்லிணக்க அரசியல்!

மேற்குலக வலையில் இருந்து நழுவிச் செல்வதற்கு இலங்கை அளவுக்கு தந்திரோபாயமான நாடாக இருக்கிறது. சுதந்திரத்திற்குப் பின்னரான அதன் அரசியல் மற்றும் பொருளாதாரப் பயணம் பல விபத்துக்களையும் காயங்களையும் எதிர் கொண்டது என்பதில் சந்தேகமில்லை, இதனால் நாட்டிற்கு வேறு வழியின்றி சர்வதேச நாணய நிதியத்தின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இலங்கை மீட்சியடைந்து வருவதாக நாணய நிதியம் அபிவிருத்தியடைந்து வரும் உலகின் ஏனைய பகுதிகளுக்கு காட்ட விரும்புகிறது. ரணில் விக்கிரமசிங்க இந்த பிரிவின் தலைமை செவிலியராக செயற்படுகிறார், அவரை நிரந்தரமாக வைத்திருக்க சர்வதேச நாணய நிதியம் விரும்புகிறது.

இது மிகவும் வேதனையான சிகிச்சையாக இருக்கும். வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களில் மந்தநிலைக்கு மத்தியில் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கை தொடங்கியவுடன், சாமானியர்கள் இது வரை அனுபவித்த வேதனை மற்றும் சிரமங்கள் முக்கியமற்றதாகி விடும். ஏற்கனவே ஜேர்மனி மந்தநிலையில் இருப்பதாகவும், மீதமுள்ளவை அதிக பணவீக்கம், உயரும் வட்டி வீதங்கள் மற்றும் விநியோக தடைகளை சமாளிக்க போராடி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாணயநிதியம் ஆனது 2024 ஆம் ஆண்டைப் பற்றி கவலை கொண்டுள்ளது மற்றும் உலக வங்கி இன்னும் இருண்ட ஒரு பிரதிமையை எதிர்வு கூறுகிறதும் 2020 களை இழந்த தசாப்தமாக பிரதி செய்வதற்கு தயாராகிறது.

எவ்வாறாயினும் சர்வதேச நாணய நிதியத்தின் கடைசி இரண்டு வருகையாளர்களான தூதரகத் தலைவர் பீட்டர் பிரூயர் மற்றும் நாணயநிதியத்தின் ஆசியா மற்றும் பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஷ்ணா ஸ்ரீனிவாசன் ஆகியோர் இலங்கை இது வரை அடைந்துள்ள சிறிய முன்னேற்றம் குறித்து திருப்தியுடன் குறிப்பிட்டனர், ஆனால் அதற்கு முழு ஒத்துழைப்பை வழங்குமாறு அனைவரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பரிசோதனை வெற்றியடைந்து நோயாளி முழுமையாக குணமடைவார். இலங்கை மத்தியவங்கியின் ஆளுநரும் அவர்களின் அறிக்கையை ஆமோதிப்பது போல், சர்வதேச தொழிலாளர் அமையம் மற்றும் ஏனையவர்களுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் தனது முக்கிய உரையை ஆற்றியபோது, நீண்ட கால பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்க குறுகிய கால வேதனையான நடவடிக்கைகள் அவசியம்' என்று தனது விருப்பத்திற்குரிய கருத்தை மீண்டும் வலியுறுத்தினார்.

'கூட்டுக் கொள்கை நடவடிக்கைகள் வணிகங்களுக்கும் குடும்பங்களுக்கும் வேதனையளிக்கின்றன'. இந்த எச்சரிக்கைகள் மற்றும் அவற்றின் தாக்கம் பெரும்பான்மையானவர்களின் அன்றாட வாழ்வில் என்னவாக இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ள ஒருவர் ராக்கெட் விஞ்ஞானியாக இருக்க வேண்டியதில்லை.

இந்த தருணத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் சோதனைக்கு கடுமையான சவால் எதுவும் இல்லை. என்.பி.பி ஜே. வி. பி. தவிர கிட்டத்தட்ட அனைத்து அரசியல் கட்சிகளும் ஒருமித்த கருத்துடன் நிகழ்ச்சி நிரலை ஆதரிப்பதில் சில மேலோட்டமான விமர்சனங்களை அரசியல் புள்ளி மதிப்பெண்களால் தூண்டிவிடுகின்றன. உதாரணமாக, ஐக்கியமக்கள் சக்தியின் செய்தித் தொடர்பாளர், சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் என்று கூறியுள்ளார்.

ஆனால் அபிவிருத்தியை வேகத்துடன் தொடர அரசாங்கத்திடம் வளர்ச்சித் திட்டம் இல்லை. ஐக்கியமக்கள் சக்தியிடம் ஒன்று இருக்கிறதா? மறுபுறம், நவ தாராளவாத சூத்திரத்தை விமர்சிப்பதில் தேசிய மக்கள் சக்தி உறுதியானதாக உள்ளது, ஆனால் முறைமை மாற்றத்தை வலியுறுத்துவதைத் தவிர அதன் மாற்று பாதை எவ்வாறாக இருக்கும் என்பதை அது போதுமான அளவில் விளக்கவில்லை. எவ்வாறாயினும், குறிப்பாக இளைஞர்கள் மற்றும் நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் கொண்ட வாக்காளர்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்தி தேர்தல் ரீதியில் பிரபலமடைந்து



வருவதாக சான்றுகள் காட்டுகின்றன. இந்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவிருந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலை ரணில் விக்கிரமசிங்க விரும்பாததற்கு அதுவே பிரதான காரணமாகும். ஆனால் விரைவில் ஒரு ஆணைக்காக மக்களிடம் செல்ல வேண்டும்.

இறுக்கமான வரவு செலவுத் திட்டத்துடன் இதுவரை எட்டப்பட்ட பணஸ்திரத் தன்மையின் சாயல், ரூபாயின் மதிப்பு அதிகரிப்பு மற்றும் சில அத்தியாவசிய நுகர்வோர் பொருட்களின் விலை வீழ்ச்சி ஆகிய இரண்டையும் கருத்தில் கொண்டு, தேர்தலுக்குச் செல்வதன் மூலம் இந்த வாய்ப்பை அதிக பட்சமாகப் பயன்படுத்த சாமர்த்தியமுள்ள ஜனாதிபதி விரும்புகிறார்.

இந்தப் பின்புலத்தில் தான் தேசியப் பிரச்சினை என்று சொல்லப்படுவதைக் கையாள்வதில் அவருடைய புதுப்பிக்கப்பட்ட ஆர்வத்தைப் பார்க்க வேண்டும். முதலில் இந்தியாவினால் அழுத்தம் கொடுக்கப்பட்டு, தற்போது சர்வதேச நாணய நிநியத்தால் அதன் பொருளாதார மீட்சி நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக தூண்டப்பட்டு, இன நல்லிணக்கத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் தனது அதிர்ஷ்டத்தை முயற்சிக்கிறார். மற்றெல்லாவற்றையும் விட, நல்லிணக்கத்தை ஏற்படுத்தினால், புலம்பெயர் தமிழ் சமூகத்தின் வெளிநாட்டு முதலீட்டின் மூலம் பொருளாதாரத்திற்கு நிதிரீதியான நன்மை கிடைக்கும். ஆனால் யதார்த்தத்தை எதிர்கொள்ளும் தைரியம் இல்லாததால் இந்த முறையும் அவர் வெற்றி பெறப் போவதில்லை.

அப்பட்டமாகச் சொல்வதென்றால், ஆளும் சிங்கள உயரடுக்கும் சங்கத்தினரும் உரிமை கோரும் இலங்கையின் முழு உரிமையையும் ஏனைய அனைத்து இன மற்றும் மத சிறுபான்மையினரையும் அடி பணிய வைப்பதற்கு விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. அது மாத்திரமன்றி, இன்று பொருளாதாரம் இப்படிச் சீர்குலைந்த நிலைக்கு இனவாத அரசியலே முதன்மைக் காரணமாக இருந்திருக்கிறது என்ற உண்மையையும் இந்த சக்திவாய்ந்த உயரடுக்கு ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் பரீட்சையானது பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதில் வெற்றி பெற்றாலும், சமூகங்கள் ஒற்றுமையில்லாமல், துண்டிக்கப்பட்டு, ஒத்துழைக்காமல் இருக்கும் வரை நிலையான அபிவிருத்தி சாத்தியமில்லை. இலங்கையின் கடந்த எழுபத்தைந்து வருட வரலாற்றில் சிறுபான்மையினரின் தலைவிதியைக் கட்டுப்படுத்த பெரும்பான்மை இன சமூகம் தனது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தியமை மற்றும் அதன் போக்கில் பொருளாதாரம் எதிர்பாராமல் பலியாகியமையின் முறியாத பதிவாகும். ஆயினும்கூட, சிங்கள ஆளும் உயரடுக்கு பொருளாதார அழிவுக்கும் இனவாதத்திற்கும் இடையிலான தொடர்பை அங்கீகரிக்க மறுக்கிறது. மாறாக, அரசியல் அதிகாரத்தின் கடிவாளத்தைப் பற்றிக் கொள்ளவும், சிங்கள பௌத்த மேலாதிக்கத்தைப் பேணவும், பாதுகாக்கப்பட வேண்டிய மற்றும் ஊக்குவிக்கப்பட வேண்டிய ஒரு பலமாக இனத் தேசியவாதத்தைப் பார்க்கிறது. மறைந்த மங்கள சமரவீரவைத் தவிர ரணில் விக்கிரமசிங்க அல்லது பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த வேறு எந்தத் தலைவரும் இந்த ஆக்கிரமிப்பு அணுகுமுறையைக் கண்டிக்கத் தயாராக இல்லை. இந்த அணுகுமுறைக்கு எதிராக பொது நிலைப்பாட்டை எடுக்காமல் எந்த ஒரு நல்லிணக்கத்திற்கும் இடமிருக்க முடியாது.

பிரிவினையின் மறுபக்கமும் வேறுபட்டது உதாரணம் தமிழ் சிறுபான்மையினராகும் அந்த சமூகத்திற்குள் பெரும்பான்மை ஆதரவைக் கொண்டிருக்கும் மற்றும் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்த முயற்சிக்கும் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைமையானது, விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தினால் தமிழர்கள் தங்கள் உரிமைகளையும் சுதந்திரத்தையும் வென்றெடுக்க முடியும் என்று நம்பும் சர்வதேச இராஜதந்திரம் மற்றும் பொருளாதார அழுத்தம் மூலம் தமிழ் இளைஞர்களின் தலைமுறையையும் எதிர்கொள்கிறது.

இந்த தலைமுறையினரின் வலிமையும் உறுதியும் அதன் புலம்பெயர் சகோதரர்களுடனான அதன் இணைப்பில் இருந்து வருகிறது. இந்த நம்பிக்கை தான் கடந்த ஆண்டு தமிழ் இளைஞர்களில் பெரும் பாலனவர்களை அரகலயவுக்கு ஆதரவளிப்பதில் இருந்து மிகவும் வருத்தத்துடன் ஒதுக்கி வைத்தது. இது துரதிருஷ்டவசமானது. ரணில் விக்கிரமசிங்க அல்லது வேறு எந்த சிங்களத் தலைவரும் இந்தப் புதிய மாற்றத்தை புறக்கணிக்க முடியாது. செயல்கள் வார்த்தைகளை விட வலுவானவை. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், ஆயுதப்படைகளின் ஆதரவுடன் பௌத்த மதகுருமார்கள் மிகவும் ஆக்ரோஷமாக நடந்து கொண்டு நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழர் பகுதிகளில் அத்துமீறி நுழைந்த சம்பவங்கள் பல நடந்தன.

இந்த ஆக்கிரமிப்பை நிறுத்த ரணில் விக்கிரமசிங்க எதுவும் செய்யவில்லை. உதாரணமாக, வடக்கில் காங்கேசன் துறையில் தையிட்டியில் திஸ்ஸ ரரஜ மஹா விகாரையை நிர்மாணிப்பதற்கான மிகச் சமீபத்திய முயற்சி, இந்த ஆக்கிரமிப்பு எவ்வாறு முறைப்படுத்தப் பட்டுள்ளது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. தொல்லியல் திணைக்களத்தை சேர்ந்த ஒரு அதிகாரி மட்டுமே சென்று ஒரு இடத்தை அடையாளம் கண்டு, அது பௌத்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்று அறிவிக்க வேண்டும். அதன் பிறகு, மதகுருமார்கள் அந்த இடத்தைப் பார்வையிட்டு மத சடங்குகளுடன் புனிதப்படுத்துகிறார்கள். ஆயுதப்படைகள் தேவையான பாதுகாப்பை வழங்குகின்றன, அதன் பிறகு அந்த இடத்தில் விகாரை கட்ட அரசு நிதி பாய்கிறது.

கட்டுரையாளர்:-
அவுஸ்திரேலியாவில் இருந்து
- அமீர் அலி -




திருகோணமலையில் உள்ள மேக்கெய்சர் விளையாட்டரங்கிற்கு அருகில் உள்ள புனித அரச மரங்கள், வியட்நாமில் இருந்து மதகுருமாரை அழைத்து வந்து அந்த இடத்தை ஆசீர்வதித்தமை இந்த வகையான ஆக்கிரமிப்புக்கு மற்றொரு எடுத்துக்காட்டு. இதுவே தமிழர் பிரதேசங்களில் சிங்களவர்களின் அத்துமீறலின் ஏற்பாட்டு முறையாக மாறியுள்ளது.

நாட்டிலுள்ள எந்த மாகாணமும் அல்லது மாவட்டமும் எந்தவொரு சமூகத்திற்கும் பிரத்தியேகமாக சொந்தமானது அல்ல என்ற அடிப்படையில் சிங்கள அரசியல் தலைவர்கள் இந்த செயற்பாட்டை அங்கீகரிக்கின்றனர். ஆனால் அந்த வாதத்தை முழு தீவையும் உள்ளடக்கியதாக நீடிக்க அவர்கள் தரப்பில் தயக்கம் உள்ளது.

பெரும்பான்மையினருக்கும் சிறுபான்மையினருக்கும் இடையே வளர்ந்து வரும் பதற்றத்தின் தீவிரத்தை எதிர்கொள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு தைரியம் இல்லை. இராணுவத்தைத் தவிர பௌத்த மக்கள் இல்லாத தமிழ் பிரதேசங்களில் புதிய விகாரைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற அதே வேளை, முஸ்லிம் பிரதேசங்களில் இருந்த பள்ளிவாசல்கள் மற்றும் புதைகுழிகள் அகற்றப்படுகின்றன. மஹரவில் உள்ள பள்ளிவாசல் மற்றும் உருகல, மெத மஹனுவரவில் உள்ள புதைகுழி ஆகியவை பல நிகழ்வுகளில் இரண்டு உதாரணங்கள். பொருளாதார மீட்சிக்கும் நல்லிணக்க அரசியலுக்கும் இடையில் ரணில் விக்கிரமசிங்க சிக்கியுள்ளார்.

புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீட்டை பொருளாதாரம் விரும்புகிறது மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இது தெரியும். ஆனால், அதிகாரப் பகிர்வுக்கான தமிழர் கோரிக்கைகளுக்கு அரசியல் இடமளிக்க வேண்டியா தேவைப்பாடு உள்ளது.

நல்லிணக்கத்தை நடைமுறைப்படுத்துவது எவ்வளவுக்கு அபாயகரமான நடவடிக்கை என்பதை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ 2019 இல் புதுடில்லிக்கு விஜயம் செய்த பின்னர் 13வது திருத்தத்தை அமுல்படுத்துவதாக உறுதியளித்த போது அவருக்கு என்ன நேர்ந்தது என்பது நன்றாக விளக்குகிறது. சிங்கள பவுத்தர்களின் தெளிவான பெரும்பான்மை ஆணையுடன் கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அது இல்லை. எனவே அவர் சமரசம் செய்யத் துணிவாரா? பொருளாதார மீட்சி நல்லிணக்க அரசியலுடன் மோதுகிறது. இந்த மோதல் முறைமை மாற்றத்தின் அவசியத்தை மீண்டும் ஒரு முறை கோடிட்டுக் காட்டுகிறது.

# அகழ்வாராச்சியை அநுராதபுரத்திலும் பொலன்னறுவையிலும் மேற்கொண்டால்

## தமிழர் அரசோச்சிய வரலாறும் நன்கு தெரியவரும்!

அனந்த பாலகிட்ணர்

இலங்கையின் தொல்பொருள் திணைக்களம் தற்சமயம் வரலாற்றுத்தடயங்களைத் தேடி வடக்கே பல இடங்களில் அகழ்வாரச்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் புதிய பௌத்த விகாரைகளையும் வடக்கே அமைப்பதற்கும் அரசாங்கம் திட்டங்களை வகுத்துள்ளது.




இத்தகைய பின்னணியில் வரலாற்றுத் தகவல்களை நன்கு ஆராய்ந்து அநுராதபுரத்திலும் பொலநறுவையிலும் தொல்பொருள் திணைக்களம் நேர்த்தியான அகழ்வாராச்சிகளை மேற்கொண்டால் சோழர் காலத்தில் தமிழர்கள் அரசோச்சிய வரலாறும் நன்கு புலனாகும்.

சோழ வம்சத்தை சேர்ந்த எல்லாள மன்னன் நேர்மையான நல்லாட்சிக்குப் பெயர் பெற்றவர். சிங்கள மன்னரான துட்டகைமுனுவால் தோற்கடிக்கப்பட்ட போதிலும் மிகவும் மரியாதையோடு துட்டகைமுனு மன்னரால் சிறப்பிக்கப்பட்டவர் எல்லாள மன்னர்.

இன்றுங்கூட பொலன்னறுவையில் சோழர் கால தடயங்களை அங்கு கட்டப்பட்டுள்ள சிவாலயங்கள் மற்றும் அவற்றில் சிகிலமடைந்துள்ள பல சிற்பங்கள் மூலமாகவும் அறிந்து கொள்ள முடியும்.

பௌத்த மதம் என்பது சிங்கள மக்களுக்கு மட்டுமே போதிக்கப்பட்டது போலவே இலங்கையிலுள்ள அரைவேக்காடான பௌத்த குருமார் பலர் கருதுகின்றனர்.

ஆனால் பௌத்த மதம் மானிட குலத்துக்கு புத்த பகவானால் போதிக்கப்பட்டதாகும்.

தமிழிலுள்ள ஐம்பெரும் காவியங்களில் குண்டலகேசி, மணிமேகலை, சிப்பதிகாரம் ஆகியவை பௌத்த மதத்தைப் பின்னணியாகக் கொண்டவையாகும்.

வடக்கே பௌத்த விகாரைகளை அமைக்கும் நடவடிக்கை என்பது புத்த பகவானின் போதனைகளை மதிப்பதற்குப்பதிலாக அவற்றை கொச்சைப்படுத்துவதாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

சோழ மன்னர்கள் இந்து - சைவர்கள். கட்டடக்கலை, நீர்ப்பாசனம், போன்றவற்றில் உயரிய தன்மைகளைப்பேணியவர்கள். பலமிக்க கடற்படை, தரைப்படை என்பவற்றோடு நாடுகள் பலவற்றை இந்தோனேசியாவரை வியாபித்தவர்கள். இருந்தபோதிலும் ஏனையோரது மத உணர்வுகளை அவர்கள் மதித்திருந்தார்கள்.

தமிழின் பெருமை எத்தகையது என்பதையும் சைவ சமயம் எவ்வளவு துாரம் தொன்மை வாய்ந்ததென்பதையும் இந்தியாவில் திறக்கப்படுகின்ற புதிய பாராளுமன்ற கட்டடத் தொகுதி மூலமாக அறிந்து கொள்ள முடியும்.

இன்றைய இந்திய பிரதமர் பாராளுமன்றில் நல்லாட்சியின் சின்னமாக வைக்கவுள்ள செங்கோல் நந்திச்சின்னத்தை மையமாக முதன்மைப்படுத்தியதாகவும் கோளறு பதிகத்திலுள்ள ஒரு பாடலையும் கொண்டதாக இருக்கின்றது.

புதிய இந்திய பாராளுமன்றத்தில் வைக்கப்படவுள்ள செங்கோல் வெறுமனே நல்லாட்சியின் சின்னமாக மட்டும் விளங்கவில்லை. ஒர் உயர்ந்த குடியாட்சியை பிரதிபலிப்பதாகவும் அமையவுள்ளது. இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஹிந்தி மொழி பேசுபவராக இருந்தாலும் ஒரு சிறந்த தமிழ் பற்றாளனாகவே

> **தமிழின் பெருமை எத்தகையது என்பதையும் சைவ சமயம் எவ்வளவு துாரம் தொன்மை வாய்ந்ததென்பதையும் இந்தியாவில் திறக்கப்படுகின்ற புதிய பாராளுமன்ற கட்டடத் தொகுதி மூலமாக அறிந்து கொள்ள முடியும்.**

தும்மை இனங்காட்டியுள்ளார். சில மாதங்களுக்கு முன்னர் சீனத்தலைவர் இந்தியா வந்திருந்தபோது அவருக்கு வரலாற்று ரீதியான இடங்களை காண்பிப்பதற்கு பிரதமர் மோடி தேர்ந்தெடுத்த இடம் பல்லவர் கால கட்டடங்களைக்கொண்டிருந்த மாமல்லபுரம்



சுற்றுலா பிரதேசமே என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே தற்போது இந்தியாவின் புதிய பாராளுமன்றக் கட்டடத்திலும் இந்தியா சுதந்திரமடைந்தபோது இந்தியாவின் முதல் பிரதமர் நேருவுக்கு தமிழகத்தின் ஆதீன பீடாதிபதி ஒருவரினால் வழங்கப் பட்ட செங்கோலே முக்கிய இடம் வகிக்கவுள்ளது.

கூடவே இத்தடவை இந்திய புதிய பாராளுமன்ற கட்டடத்திறப்பு விழாவில் தமிழக ஆதீனங்களைச்சேர்ந்த பீடாதிபதிகளும் பங்கேற்று வேதபாராயணங்களை ஓதவிருப்பது குறிப்பித்தக்க விடயமாகவே இருக்கின்றது.


தமிழ் மீதும் தமிழர்கள் மீதும் வட இந்திய அரசியல்வாதிகளின் பற்றென்பது பன்னெடுங்காலமாகவே இருந்து வருகின்றது. இந்தியாவின் முதல் இந்தியரான தேசாதிபதி, தமிழரான ராஜ கோபாலச்சாரியார் என்பது குறிப்பிடத்தக்கது.


அத்துடன் இந்திரா காந்தி பிரதமராக வருவதற்கு தமது காங்கிரஸ் கட்சி மூத்த அங்கத்துவத்திலிருந்தும் விலகி இடமளித்தவர் கர்ம வீரர் காமராஜர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இந்தியாவின் ஜனநாயக விழுமியங்களை பிரதிபலிக்கும் அழகிய நவீன வசதிகளைக்கொண்ட கட்டடத் தொகுதியாக மட்டுமல்ல. இந்தியாவின் ஒருமைப்பாட்டையும் பிரதிபலிக்கும் ஒரு நிர்மாணமாகவே புதிய பாராளுமன்ற கட்டிடத்தொகுதி விளங்கவுள்ளது.

இந்த வகையில் உள்நாட்டு யுத்தங்களால் சின்னாபின்னப்பட்ட நாடுகள் பல தற்போது தம்மை பொருளாதார ரீதியாக கட்டி எழுப்பி வருவதைக் காண முடியும். 1955ஆம் ஆண்டு முதல் 1975ஆம் ஆண்டு வரை இரு தசாப்த காலம் யுத்தத்தினால் துவண்டு போயிருந்த வியட்நாம் தற்போது அதிசயிக்கத்தக்க பொருளாதரா வளர்ச்சியைக் கண்டுவருகின்றது.

2009ஆம் ஆண்டு இலங்கையின் மூன்று தசாப்த கால யுத்தமும் முடிவுக்கு வந்த போது இலங்கையில் புதிய கைத்தொழில் கட்டடங்கள் மேலெழுந்து இலங்கை பொருளாதாரம் சிறப்படையும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இலங்கையில் புதிய பொருளாதார நடவடிக்கைகள் மேம்படும் என்ற எதிர்பார்ப்பு கானல் நீராக மாறி அனைத்துமே அதள பாதாளத்தில் மீளவும் வீழ்வது போலவே அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் வடக்கே இடம்பெறும் தொல் பொருள் திணைக்களத்தின் நடவடிக்கைகள் விளங்குகின்றன.





# ராஜபக்ஷாக்களின் எதிர்கால அரசியல் வியூகங்கள்

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
– வீ.தனபாலசிங்கம் –



மூன்றரை வருடங்களுக்கு முன்னர் ராஜபக்சாக்கள் மீண்டும் பதவிக்கு வந்த போது இலங்கையின் ஆட்சியதிகாரத்தில் இருந்து தங்களது குடும்பத்தை நீண்ட காலத்துக்கு அசைக்கமுடியாது என்று அவர்களுக்கு ஒரு நம்பிக்கை இருந்தது. அவர்களின் அதிவிசுவாசிகள் குறைந்தது ஒரு இருபது வருடங்களுக்காவது தங்களது அரசியல் எசமான்கள் ஆட்சியில் இருப்பார்கள் என்று பேசினார்கள். தங்களில் யார்யார் அடுத்தடுத்து ஜனாதிபதியாக வருவது என்று ராஜபக்சாக்கள் ஒரு பட்டியல் போட்டு செயற்பட்டார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை பொறுத்தவரை மூத்த மகன் நாமல் ராஜபக்சவை அரியாசனம் ஏற்றுவதே அவரின் குறிக்கோளாக இருக்கிறது என்ற போதிலும், மகன் நாட்டின் உயர்பதவியை வகிப்பதற்கு உரிய அனுபவத்தைப் பெற்று தயாராகும் வரை தனது சகோதரர்களில் எவராவது ஒருவருக்கு அந்த வாய்ப்பை கொடுப்பதே அவர் தீட்டிய குடும்ப அரசியல் நிகழ்ச்சித்திட்டம். கோட்டாபய ராஜபக்சவுக்கு அடுத்து ஜனாதிபதியாக வருவதற்கு நம்பிக்கையைக் கொண்டிருந்தவர் முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ச. ஆனால், ராஜபக்சாக்கள் குறுகிய காலத்திற்குள் தங்களது அரசியல் ஆதிக்கத்



போதிலும், இன்று ராஜபக்ச குடும்ப உறுப்பினர்களில் மக்களால் மிகவும் வெறுக்கப்படுபவராக அவரே விளங்குகிறார் எனலாம்.

இதுவரையில் கட்சியின் தேசிய அமைப்பாளராக இருந்துவரும் பசில் ராஜபக்ச தலைவராக வருவதை அல்லது ஜனாதிபதி வேட்பாளராக அவரை நிறுத்தும் யோசனையை கட்சிக்குள் கணிசமான பிரிவினர் கடுமையாக எதிர்க்கிறார்கள். அவரின் தலைமையில் கட்சி தேர்தல்

வாரமும் கூட அவ்வாறு ஒரு கதையை கேள்விப்படக்கூடியதாக இருந்தது. வழமை போன்றே சாகர காரியவாசம் அவ்வாறு பிரதமராக அவர் பதவியேற்கப் போவதில்லை என்று மறுப்பை வெளியிட்டார்.

தற்போதைக்கு பிரதமராகப் பதவியேற்கிறாரோ இல்லையோ அரசியலில் தொடர்ந்து இருக்கப் போவதாகவும் பொருத்தமான தருணம் வரும்போதே ஓய்வு பெறப் போவதாகவும் மகிந்தராஜபக்ச

பது அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியாத விடயம். அதிகாரத்தைச் செலுத்திக் கொண்டிருப்பதற்கு அவர்களுக்கு ஒரு அரசாங்கம் தேவைப்படலாம். ஆனால், மீண்டும் ஒரு ராஜபக்ச ஆட்சி நாட்டு மக்களுக்கு தேவையா? மீண்டும் அவர்களின் ஆட்சி என்ற யோசனை ஒரு கெடுதியான வேடிக்கை மாத்திரமல்ல கொடுமையான வேடிக்கையும் கூட என்று கடந்த வாரம் ஒரு அரசியல் அவதானி எழுதியிருந்தார்.

2015 ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த பிறகு நான்கு வருடங்களில் மீண்டும் ஆட்சியதிகாரத்துக்கு ராஜபக்சாக்கள் வரக்கூடியதாக இருந்த நிலைவரத்துக்கும் மக்கள் கிளர்ச்சி அவர்களை அதிகாரத்தில் இருந்து தூக்கியெறிந்த பின்னரான தற்போதைய நிலைவரத்துக்கும் இடையில் பாரிய வேறுபாடு இருக்கிறது.

கடந்த காலத்திலும் இலங்கை அரசியல் சில உயர் வர்க்கக் குடும்பங்களின் ஆதிக்கத்தில் இருந்திருக்கிறது. ஆனால் மகிந்த ராஜபக்ச அதிகாரத்துக்கு வந்த பிறகு அவரது குடும்பம் அரசியலிலும் ஆட்சிமுறையிலும் அருவருக்கத்தக்க முறையில் மட்டுமீறிய ஆதிக்கத்தைச் செலுத்தியதைப் போன்று அந்த குடும்பங்கள் நடந்து கொண்டதாக கூறமுடியாது. ராஜபக்சாக்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்ததைப் போன்று அந்த குடும்பங்களுக்கு எதிராக மக்கள் ஒருபோதும் செய்ததில்லை.

துக்கு ஆபத்து வரும் என்று கனவிலும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டாரகள். தங்களுக்கு எதிராக சிங்கள மக்கள் கிளர்ந்தெழுந்ததை அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. குறிப்பாக விடுதலை புலிகளை தோற்கடித்து உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வந்தமைக்காக சிங்கள மக்கள் தங்களது குடும்பத்துக்கு என்றென்றைக்கும் கடமைப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்ற ஒரு எண்ணத்தை வளர்த்துக் கொண்ட ராஜபக்சாக்கள் ஆட்சியதிகாரம் மீது தங்களுக்கு ஒரு உரித்து இருப்பது போன்று நடந்து கொண்டார்கள்.

போர் வெற்றியை பயன்படுத்தி இடையறாது முன்னெடுத்து வந்த சிங்கள பௌத்த பெரும்பான்மை இனவாத அணிதிரட்டல் என்றென்றைக்கும் தங்களுக்கு கைகொடுக்கும் என்று அவர்கள் உறுதியாக நம்பினார்கள். கடந்த வருடத்தைய 'அறகலய' மக்கள் கிளர்ச்சிக்கு தங்களது தவறான ஆட்சிமுறையின் விளைவாக தோன்றிய — இலங்கை வரலாறு காணாத படுமோசமான பொருளாதார நெருக்கடியே காரணம் என்பதை இன்னமும் கூட ராஜபக்சாக்கள் ஒத்துக் கொண்டதாக இல்லை.

மக்கள் கிளர்ச்சியின் பின்னணியில் வெளிநாட்டு சதி இருந்ததாக முன்னரும் அவர்கள் கூறிய போதிலும், அண்மைக் காலமாக அது குறித்து பேசுவதை கடுமையாக தீவிரப்படுத்தியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அதேவேளை எந்த தேர்தலையும் எந்த நேரத்தில் நடத்தினாலும் பொதுஜன பெரமுன வெற்றி பெறும். மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் என்றும் ராஜபக்சாக்களும் அவர்களின் பரிவாரங்களும் இடையறாது பேசிக் கொண்டிருக்கிறார்கள். அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தங்களது கட்சியின் வேட்பாளராக பசில் ராஜபக்சவை நிறுத்துவதற்கான சாத்தியம் குறித்தும் அவரின் அதிவிசுவாசிகளான கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவாசம் போன்றவர்கள் அடிக்கடி கூறுகிறார்கள்.

பொதுஜன பெரமுன ஆரம்பிக்கப்பட்டு மிகவும் குறுகிய காலத்திற்குள் ஆட்சியைப் பிடிக்கக்கூடியதாக அதை கட்டியெழுப்பியவர் பசில் ராஜபக்ச என்ற

களில் படுதோல்வி அடையும் என்று அஞ்சும் அவர்கள் தங்களது எதிர்கால அரசியல் வாய்ப்புக்கள் குறித்து நம்பிக்கையற்றவர்களாக இருக்கிறார்கள். அதேவேளை மகிந்த ராஜபக்ச தொடர்ந்தும் தலைவராக இருந்தால் பொதுஜன பெரமுனவின் செல்வாக்கை மீளக்கட்டியெழுப்ப முடியும் என்ற அவர்களின் எதிர்பார்ப்பும் கூட நாட்டு மக்களின் உண்மையான மனநிலையை விளங்கிக் கொண்ட ஒன்றாக தெரியவில்லை.

அதேவேளை, இரட்டைக் குடியுரிமையை கொண்ட பசில் ராஜபக்ச தனது அமெரிக்க குடியுரிமையை கைவிடுவது குறித்தோ அல்லது ஜனாதிபதி வேட்பாளராக வருவது குறித்தோ இதுவரையில் பகிரங்கமாக எதையும் கூறவில்லை. அவர் தொடர்பில் கட்சிக்குள் தோன்றியிருக்கும் முரண்பாடுகள் குறித்து மகிந்த ராஜபக்சவும் எதுவும் பேசுவதில்லை.

பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவத்தில் ஏற்படக்கூடிய எந்தவொரு மாற்றமும் கட்சியில் மேலும் பிளவுக்கு வழி வகுக்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது. பசில் ராஜபக்சவின் தலையீடுகள் காரணமாகவே ஏற்கெனவே பல முக்கிய அரசியல்வாதிகள் கட்சியில் இருந்து வெளியேறினார்கள். எது எவ்வாறிருந்தாலும் ராஜபக்ச சகோதரர்கள் தங்களுக்குள் அரசியல் ரீதியில் பிளவுபட்டுச் செயற்படுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அதேவேளை ஒரு ராஜபக்சவை தவிர வேறு எவரும் அந்த கட்சியின் தலைவராக வருவதும் கூட சாத்தியமில்லை.

மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு அதிகாரப் பதவிகளில் இருந்து இறங்கிய ராஜபக்சாக்கள் தங்கள் கட்சியின் செல்வாக்கை மீளக்கட்டியெழுப்புவதற்கு அண்மைய மாதங்களில் முன்னெடுத்த முயற்சிகள் பயனைத்தரவில்லை. இறுதியாக கொழும்பு கெம்பல் பூங்காவில் பொதுஜன பெரமுனவின் மேதினக் கூட்டத்தில் காலியாகக் கிடந்த கதிரை வரிசைகள் தங்களுக்கு மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய ஆதரவின் இலட்சணத்தை ராஜபக்சாக்களுக்கு தெளிவாக உணர்த்தியிருக்க வேண்டும்.

இதனிடையே மகிந்த ராஜபக்ச மீண்டும் பிரதமராக பதவியேற்பது குறித்த கதைகள் அடிக்கடி பேசப்படுகின்றன. கடந்த

எப்போதோ கூறி விட்டார். ஜனாதிபதியாக தனது இரண்டாவது பதவிக் காலத்தின் முடிவுக்கு பிறகு அவர் அரசியலில் இருந்து ஓய்வு பெற்றிருக்க வேண்டும் என்று கடந்த வருடம் ராஜபக்ச குடும்பத்தின் மூத்தவர் சமால் ராஜபக்ச பாராளுமன்றத்தில்ஒரு தடவை கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜபக்சாக்களைப் பொறுத்தவரை அதிகாரத்தைக் கைவிட்டு இருப்பதென்

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக அரச நிருவாகத்தில் எதேச்சாதிகாரப் போக்கை படிப்படியாக அதிகரித்து வந்திருக்கிறது. ஆனால் ராஜபக்சாக்கள் ஜனாதிபதியாக வந்த பிறகு தான் அந்த எதேச்சாதிகாரம் உச்ச அளவுக்குப் போனது. தங்களிடம் அதிகாரங்களைக் குவித்து (22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய
முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இனுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# விந்தணு தானத்தால் பிறந்த பெண் தனது தந்தையை தேடிய..

(1ம் பக்கத் தொடர்ச்சி) நீண்ட நேர உரையாடலுக்குப் பின், அவர், 'ஆம் நான் உன்னோட சகோதரனாக இருக்க முடியும் என்பது மட்டுமல்ல, உனது உண்மையான தந்தை யார் என்பதும் எனக்குத் தெரியும் என்றார்.

அவர் சொன்ன பெயரைக் கேட்டதும் என் காலுக்குக் கீழே நிலம் அசைந்தது போல் தெரிந்தது. எங்கள் இருவருக்கும் கிம் மெக்மோரிஸ் என்பவர் தான் தந்தை என்றும், எனது தாய் விந்தணு தானம் பெற்று செயற்கை கருவுட்டல் செய்த மருத்துவமனையில் அவர் மருத்துவராக இருந்ததாகவும் அந்த நபர் கூறினார்.

என்னுடைய அம்மாவுக்கும் அந்த மருத்துவர் தான் சிகிச்சை அளித்ததாகவும் அவர் என்னிடம் தெரிவித்தார். அதில் கவலைப்பட ஒன்றுமில்லை என்று நான் தொடக்கத்தில் நினைத்தேன். இருப்பினும், அதன் பின், எனது மகனுடைய டிஎன்ஏவுடன் பொருந்திய நபர்களின் பட்டியலில் இருந்த மேலும் இரண்டு மூன்று பேரைச் சந்தித்துப் பேசினேன். அவர்களுடனான கலந்துரையாடலுக்குப் பிறகு, அவர்கள் சொன்ன விவரங்களை அலசி ஆராய்ந்ததில் எனக்குக் கிடைத்த ஒரே பெயர் கிம் மெக்மோரிஸ்.

என் அம்மாவுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கிம் மெக்மோரிஸ் பற்றிய உண்மை இறுதியாக எனக்கு தெரிய வந்தது. 106-ம் எண்ணாகப் பதிவு செய்யப்பட்டிருந்த நபரிடமிருந்து விந்தணுவைப் பெற எனது அம்மா விரும்பிய போதிலும், அந்த விந்தணுவுக்குப் பதிலாக எனது தாயை கருவுட்டுவதற்கு கிம் தனது சொந்த விந்தணுவைப் பயன்படுத்தியுள்ளார். மருத்துவர் கிம் மெக்மோரிஸ் பல நோயாளிகளிடமும் இதைச் செய்திருக்க வேண்டும் என்றும் அப்போது எனக்குள் சந்தேகம் எழுந்தது.

இது எனக்கு உண்மையிலேயே அதிர்ச்சியாகவும், எரிச்சலாகவும் இருந்தது. என் தந்தை ஸ்டீவும், நானும் இந்த உண்மையை கண்டு பிடித்தோம். அதன் பின் அந்த மருத்துவரைத் தாண்டி எனது அப்பாவைத் தேடும் முயற்சிகளை நிறுத்தி விட்டேன்.

பல ஆண்டுகளாக எனது தந்தை யார் என அறிந்து கொள்வதில் அவ்வளவு ஆர்வம் காட்டிய நான், மருத்துவர் கிம்மை எனது தந்தையாக ஏற்க முடியவில்லை. அம்மாவுக்கு அவர் செய்த துரோகத்தை நினைத்து என் உள்ளங்கால்களில் தீப்பிடித்தது போன்ற உணர்வு ஏற்பட்டது. அதுமட்டுமின்றி, நான் ஏற்கெனவே எனது தந்தையாக பாவித்து வரும் தற்போதைய தந்தை ஸ்டீவை இழந்துவிடுவோமோ என்ற அச்சமும் என்னுள் ஏற்பட்டது. கடைசியில் அம்மாவைப் பற்றிய நினைவுகளும் வந்து என்னுள் ஒரு இனம்புரியாத கவலையை ஏற்படுத்தியன. இந்த உண்மைகளை எல்லாம் அவர் அறிந்தால் அவருடைய மனம் எவ்வளவு வருத்தப்படும் என்று என்னால் கற்பனை செய்துகூட பார்க்க முடியவில்லை. அவரிடம் சொல்லலாமா, வேண்டாமா என்ற குழப்பத்தில் மூழ்கியதால் பின்னர் எனது செல்ஃபோனை அணைத்து விட்டேன். ஒரு கட்டத்தில், இப்போது நான் தெரிந்து வைத்துள்ள தகவல்களை அவரிடம் சொல்ல வேண்டாம் என்றும், அப்போது தான் அவர் மகிழ்ச்சியுடன் இருப்பார் என்றும் நினைக்கத் தொடங்கினேன்.

ஆனால், முழுமையாக யோசித்த பிறகு, என்னவானாலும் சரி, நாம் உண்மையை எதிர் கொள்ள வேண்டும் என முடிவு செய்தேன். உடனடியாக அம்மாவைப் பார்க்க புறப்பட்டுச் சென்றேன். அவரிடம், 'அம்மா, நான் உன்னிடம் பேச விரும்புகிறேன். ஸ்டீவ் என் தந்தை அல்ல. என் தந்தை டாக்டர் கிம் மெக்மோரிஸ். அந்த நேரத்தில் உனக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அவர்,' என்றேன்.

அம்மா அதிர்ந்து போனது முற்றிலும் இயல்பானதே. நான் சொன்னதைக் கேட்டவுடன் அவருடைய கைகள் நடுங்க ஆரம்பித்தன. அவள் கண் முன்னே சட்டென்று இருள் வந்தது



போல் தோன்றியது. சிறிது நேரம் கழித்து அம்மா சொன்னார், 'அப்படி இருக்க வாய்ப்பில்லை. அந்த மருத்துவர் மிகவும் நல்ல மனிதர். இதை எப்படி அவர் செய்திருப்பார்?'

நான் அம்மாவிடம், 'அம்மா, நடந்தது மோசமானது. ஆனால் இந்த மோசமான நிகழ்வின் தொடர்ச்சியாக நான் உன் வாழ்க்கையில் வந்தேன். இப்போது உன் மகள் உன்னுடன் இருக்கிறாள். அவள் எப்போதும் உன்னுடன் இருப்பாள். மற்ற விஷயங்கள் குறித்து விஷயங்கள் குறித்து சிந்திக்கவோ, கவலைப்படவோ வேண்டாம்,' என்று சொன்னேன். இருப்பினும் அம்மா அதிர்ச்சியில் மூழ்கியிருந்ததை என்னால் உணர முடிந்தது. டாக்டர் கிம், எங்கள் அனுமதியின்றி நிரந்தரமாக எங்கள் வாழ்வில் நுழைந்து விட்டார். டாக்டர் கிம் மெக்மோரிஸுக்கு எதிராக எந்த குற்றவியல் அல்லது சிவில் சட்டமும் எனக்கு உதவவில்லை. ஏனெனில் அப்போது இந்த விவகாரம் சட்டத்தின் எல்லைக்குள் வரவில்லை. ஆனால், நான் டாக்டர் மெக்மோரிஸுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அந்த மோசமான சம்பவம் குறித்து பதில் அளிக்குமாறு அவரிடம் மிகவும் பணிவாகக் கேட்டேன்.

அதற்கு அவர் அளித்த பதில், 'ஆமாம், இருக்கலாம். ஆனால் அதற்கான பதிவுகள் எங்களிடம் இல்லை. ஏனென்றால் நாங்கள் ஏழு வருடங்கள் மட்டுமே அந்த பதிவேடுகளை வைத்திருப்போம். அந்த வங்கிக்கு விந்தணு தானம் அளித்தவர்கள் சிலரின் விந்தணுக்கள் உரிய தரத்தில் இல்லாததால் என்னுடைய விந்தணுக்களை நான் தானமாக அளித்திருந்தேன். உனது தாய் செயற்கை கரூவீட்டலுக்கு வந்த போது, அவருக்கு தவறுதலாக எனது விந்தணுக்கள் அளிக்கப்பட்டிருக்கலாம்,' என்றார்.

மேலும் பேசிய அவர், 'உன் அம்மா எப்படி இருந்தாலும் தாயாக வேண்டும் என்று விரும்பினார். அதற்காக அவர் நீண்ட நாட்களாக முயற்சி செய்து கொண்டிருந்தார். அதனால் அவருக்கான மாதிரிகளில் எனது விந்தணுவின் குப்பியையும் வைத்தேன்,' என்றார்.

தனது விந்தணுவை இவ்வாறு பயன்படுத்துவதில் தவறேதும் இல்லையென்றால், ஏன் அப்போதே அவர் சொல்லவில்லை. எனது விந்தணுவைப் பயன்படுத்தினால் கர்ப்பம் தரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம், என்று அவர் அப்போது என் அம்மாவிடம் சொல்லியிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் அம்மாவுக்குக் கூட இது பற்றித் தெளிவான யோசனை இருந்திருக்கும். ஆனால் அவருக்கு அது பற்றி எதுவும் தெரியாது என்பது தான் உண்மையான பிரச்சனை. அவர் இதைப் புரிந்து கொண்டிருந்தால் அவர் அதை மறுத்திருப்பதற்கும் வாய்ப்பு இருந்திருக்கும். உண்மையில் அதை அவர் மறுத்திருப்பார். ஏனென்றால் அந்த மருத்துவரின் விந்தணு அவருக்குப் பிடித்த விந்தணுக்களின் பட்டியலில் இல்லை. மொத்தத்தில் டாக்டர் கிம் மெக்மோரிஸால் இவ்வாறு ஏமாற்றப்பட்ட 13 பேரை நான் சந்தித்தேன். அதிர்ஷ்டவசமாக, நான் கண்டு பிடித்த என் தந்தை ஸ்டீவ், இதையெல்லாம் புரிந்து கொண்டார். என்னை விட்டு விலகவில்லை. மாறாக, அவருடனான எங்கள் உறவும் மேலும் நெருக்கமாக மாறியது.

ஈவ் வைலியின் வழக்கு வெளிச்சத்திற்கு வந்த பிறகு அமெரிக்காவின் பல மாநிலங்களில் இந்த வகையான செயல் குற்றம் என அறிவிக்கப்பட்டு, அது சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. மேலும், பல மாநிலங்களில் இதுபோன்ற குற்றங்களுக்கு கடும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. ஈவ் வைலி தனது கதையை பிபிசி அவுட்லுக் நிகழ்ச்சியில் கூறிய பிறகு, பலர் அவரைத் தொடர்பு கொண்டனர். தங்களுக்கும்இது போன்ற அனுபவங்கள் இருந்ததாகவும், தாங்கள் பெரும் தவறுகளுக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் பலர் ஒப்புக் கொண்டனர்.

ஈவ் வைலியின் சட்டப் போராட்டம் டெக்சாஸில் தொடங்கியது. அதன் பின்னர், சுமார் 11 மாநிலங்கள் செயற்கை கருவுட்டல் தொடர்பான புதிய சட்டத்தை இயற்றியுள்ளன. பிபிசி முண்டோவுடன் தனது கதையைப் பகிர்வதன் மூலம், செயற்கை கருவுட்டுதல் துறையில் உள்ள மோசடிகள் மற்றும் நம்பிக்கையின்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஈவ் வைலி முயல்கிறார்.

அவர் சொல்கிறார், 'என் மன வேதனையின் காரணமாகவே இது போன்ற விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற விருப்பம் எழுந்தது. இப்போது, எனது மனவேதனையை நான் மறக்க வேண்டும் என்றால், இந்த விழிப்புணர்வு பணிகளை நான் தொடர்ந்து செய்ய வேண்டும். அதைத் தான் தற்போது செய்து கொண்டிருக்கிறேன். இந்த விவகாரம் தொடர்பாக, டாக்டர் கிம் மெக்மோரிஸை தொடர்பு கொள்ள பிபிசி முயன்றது. ஆனால் அவர் எந்தப் பதிலையும் அளிக்கவில்லை. நன்றி:- பிபிசி தமிழ்:

## மாகாண சபைகளுக்கு இடைக்கால நிர்வாக முறை!

(3ம் பக்கத் தொடர்ச்சி) அவ்வாறான நிலையில் தான் அவர் இந்தியாவுக்குச் செல்கின்றார். இந்தியா நீண்ட காலமாகவே 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நடை முறைப்படுத்த வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. அதனடிப்படையில் எமது பரிந்துரைகள் அடங்கிய விடயத்தினை மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறும் வரையில் தற்காலிகமாக முன்னெடுக்கப் போவதாக ஜனாதிபதி ரணில் தனது விஜயத்தின் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடத்தில் தெரிவிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

குறித்த கோரிக்கையை முன்வைப்பதற்கு முன்னதாக நாம் தமிழரசுக்கட்சி உட்பட ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட், ரெலோ உள்ளிட்ட கட்சிகளுடன் கலந்துரையாடல்களைச் செய்தோம். ஏனென்றால் இந்தக்கட்சிகள் அனைத்துமே 13ஆவது திருத்தச்சட்டத்தினைக் முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கோரியுள்ளன. இதற்காக பிரதமர் மோடிக்கும் கடிதங்களை அனுப்பியுள்ளன. எனினும், இந்தக்கட்சி கள் எமது ஆவணத்தில் கையொப்பமிடவில்லை. அதற்கான காரணம் எமக்குத் தெரியாது. எம்மைப் பொறுத்த வரையில், எதிர்வரும் காலத்தில் தமிழரசுகட்சியும் எமது விடயத்தில் பங்கெடுக்கும் நிலைமை ஏற்படும்.

அவர்களால் அதனை தவிர்த்துச் செல்ல முடியாது. ஏனைய தரப்புக்களும் அதில் கலந்து கொள்ளும் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.


முல்லைத்தீவு புனிதபூமி
அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின்
வாழ்வுக்காகவும்
கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
12வது ஆண்டு
இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை
தொடர்புகளுக்கு:- 416 841 9600

# முந்திக் கொள்ளும் இந்தியா

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



இலங்கைப் படையினருக்கு இஸ்ரேலில் பயிற்சி வாய்ப்புகளை வழங்குவது மற்றும் இஸ்ரேலுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகள், ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து, கொழும்பில் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது. புதுடில்லியில் உள்ள இஸ்ரேலியத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேணல் அவிஹே சப்ரானி கொழும்பு வந்திருந்த நிலையில் இந்தவாரம் அந்தக் கலந்துரையாடல் இடம் பெற்றது. பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ணவுடன் நடந்த சந்திப்பின் போதே, பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடப்பட்டிருக்கிறது. இஸ்ரேலுக்கு இலங்கைக்கும் இடையில், 1980களின் தொடக்கத்தில் பாதுகாப்பு உறவுகள் நெருக்கமாக காணப்பட்டன.

அப்போது கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இஸ்ரேலிய நலன்காப்பு பிரிவு ஒன்றும் திறக்கப்பட்டிருந்தது. (பின்னர் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அதனை மூடுவதற்கு உத்தரவிட்டார்)

வடக்கு,கிழக்கில் தீவிரமடைந்த ஆயுத போராட்டத்தை நசுக்குவதற்கு, இஸ்ரேலின் புலனாய்வு மற்றும் சிறப்பு நடவடிக்கை பிரிவான மொசாட்டின், பயிற்சி மற்றும் ஆலோசனை உதவிகளை இலங்கை அரசாங்கம் பெற்றிருந்தது. அத்துடன் கடற்படைக்கு டோறா மற்றும் ஷால்டக் வகைத் தாக்குதல் படகுகளை வழங்கியதுடன், விமானப்படைக்கு கிபிர் போர் விமானங்களையும் வழங்கியது.

அந்த ஒத்துழைப்பு பின்னர் படிப்படியாக குறைந்து வந்த நிலையில் தான், மீண்டும், இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்துக் கலந்துரையாடல் நடத்தப்பட்டிருக்கிறது.

இந்தக் கலந்துரையாடல் இடம் பெற்று இரண்டு நாட்கள் கழித்து, கடந்த 20ஆம் கொழும்பில் முக்கியமானதொரு பாதுகாப்பு கலந்துரையாடல் மற்றும் கண்காட்சி இடம்பெற்றது.

தாஜ் சமுத்ரா விடுதியில் இந்த நிகழ்வை ஒழுங்கு செய்தது கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிரகம்.

இந்திய இலங்கை பாதுகாப்பு கருத்தரங்கு மற்றும் கலந்துரையாடல் என்ற பெயரில் முதல் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட இந்த நிகழ்வு, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளை கட்டியெழுப்புவதை இலக்காக கொண்டது.

குறிப்பாக, இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு ஒத்துழைப்பதற்கான புதிய பரப்புகளைக் கண்டறிவதும், இலங்கையின் ஆயுதப்படைகளின் ஆற்றலைக் கட்டியெழுப்புவதும் இந்த நிகழ்வின் இலக்குகள் என்று, இந்திய உயர்ஸ்தானிரகப் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார்.

இந்த நிகழ்வில் காணொளித் தொழில்நுட்பம் மூலமாக உரையாற்றிய இந்தியாவின் பாதுகாப்புச் செயலாளர் கிரிதர் அரமானே, இலங்கை, இந்தியாவின் முன்னுரிமைப் பங்காளி என்றும், 'அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை' என்ற கொள்கைக்கு இணங்க, இலங்கை ஆயுதப் படைகளின் திறன் மற்றும் ஆளுமையைக் கட்டியெழுப்புவதை உறுதி செய்வதில் புதுடில்லி உறுதியாக உள்ளது. என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அதாவது இலங்கைப் படைகளைப் பலப்படுத்தி வலுவான நிலையில் பேணுவதில் இந்தியா உறுதியாக இருக்கிறது என்பதை அவர் உறுதி செய்திருக்கிறார்.

இலங்கைப் படையினரின் ஆற்றல் மற்றும் ஆளுமையை அதிகரிப்பதில் இந்தியாவுக்கு கணிசமான பங்கு இருந்து வந்திருக்கிறது. இலங்கைப் படையினருக்கு அதிகளவில் பயிற்சி அளித்து வருவது இந்தியாவே. அது போலவே கடற்படைக்கு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களையும், டோனியர் கண்காணிப்பு விமானங்களையும் வழங்கியிருக்கிறது.

விமானப்படைக்கு இந்திரா ரக ராடர்களையும், எல் -70 விமான எதிர்ப்புப் பீரங்கிகளையும் கொடுத்ததும் இந்தியா தான். இந்தியாவிடம் இருந்து இலங்கைப் படையினர் பல்வேறு இராணுவத் தளபாடங்களையும் கொள்வனவு செய்கின்றனர்.

இந்த நிலையில் இந்தியாவும், இலங்கையும் பாதுகாப்புத் தளபாட உற்பத்தி மற்றும் ஏற்றுமதி உறவுகளை வலுப்படுத்த திட்டமிட்டுள்ளன.

இலங்கை இராணுவம் பயிற்சி மற்றும் ஏனைய தேவைகளுக்காக ஆண்டு தோறும், 50 மில்லியன் டொலர் செலவில், துப்பாக்கி ரவைகளை இறக்குமதி செய்கிறது. முக்கியமாக ரி 56 ரக துப்பாக்கிகளுக்கான 7.62ஒ39 மி.மீ ரவைகளும், கைத்துப்பாக்கிகளுக்கான 9 மி.மீ ரவைகளும் அதிகளவில் இறக்குமதி செய்யப்படுகின்றன.

7.62 - 39 மி.மீ ரவை ஒவ்வொன்றுக்கும் 37 ரூபா செலவிடப்படுகின்ற நிலையில், பயிற்சி மற்றும் ஒத்திகைகளில் பங்கேற்கும் இராணுவத்தினர் ஒவ்வொருவருக்கும் கிட்டத்தட்ட 300 ரவைகள் தேவைப்படும் என்று கூறியிருக்கிறார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத்.

இவ்வாறான நிலையில் தான் உள்நாட்டிலேயே இந்த ரவைகள் மற்றும் சிறிய ரக வெடிபொருட்களை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை ஒன்றை அமைப்பது குறித்து இந்தியாவுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டிருக்கிறது.

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் இந்த தொழிற்சாலையை அமைப்பதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இவ்வாறான நிலையில் தான், இலங்கையுடனான பாதுகாப்பு உற்பத்திகள் தொடர்பான உறவுகளை மேலும் பலப்படுத்தும் நகர்வில் இறங்கியிருக்கிறது இந்தியா.

தாஜ் சமுத்ரா விடுதியில் நடத்தப்பட்ட கண்காட்சியில் இந்திய, இலங்கை பாதுகாப்பு உற்பத்தித்துறை நிறுவனங்கள் பங்கேற்றிருந்தன. இந்தக் கண்காட்சி இலங்கைக்கு ஏற்றுமதி வாய்ப்புகளை வழங்காது. ஆனால் இந்தியாவுக்கு ஏற்றுமதி வாய்ப்புகளை வழங்கும். இலங்கைப் படைகளுக்கு இந்தியா அண்மையில் கூட 150 மில்லியன் டொலர் கடன் திட்டத்தை அறிவித்திருந்தது. அதில் 100 மில்லியன் டொலர் பயன்படுத்தப்பட்டு விட்ட நிலையில், இன்னும் 50 மில்லியன் டொலர் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது.

இலங்கைப் படைகளின் ஆயுதங்களில் பெரும்பாலானவை, போர்க்காலத்தில் கொள்வனவு செய்யப்பட்டவை. போர் முடிந்தே 14 ஆண்டுகளாகி விட்ட நிலையில் அந்த போர்த்தளபாடங்கள் பெரும்பாலானவற்றின் ஆயுட்காலம் நிறைவடையவுள்ளது. இவற்றுக்குப் பதிலாக புதிய போர்த்தளபாடங்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய தேவை இலங்கைக்கு உள்ளது.

அதேவேளை இந்தியா பாதுகாப்புத் தளபாட ஏற்றுமதியை அடுத்த இரண்டு ஆண்டுகளில் மூன்று மடங்குகளாக (5 பில்லியன் டொலர்) அதிகரிக்க வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் இலங்கையின் பாதுகாப்புத் தளபாட தேவையை பயன்படுத்திக் கொள்வது இந்தியாவின் முக்கியமான நோக்கங்களில் ஒன்று.

சில ஆண்டுகளுக்கு முன்னதாக பாகிஸ்தானிடம் இருந்து ஜே.எவ் -17 போர் விமானங்களை கொள்வனவு செய்ய இலங்கை முற்பட்டது. அதனை இந்தியாவே தடுத்து நிறுத்தியது.

அதற்குப் பதிலாக இந்தியா தனது சொந்த தயாரிப்பாக தேஜஸ் போர் விமானங்களை கொள்வனவு செய்யுமாறு கோரியது. ஆனால் இலங்கை அரசாங்கம் அதனை தட்டிக் கழித்து விட்டது.

தேஜஸ் போர் விமானங்களை கொள்வனவு செய்வதற்கு ஆஜென்ரீனா, பொட்ஸ்வானா, உள்ளிட்ட பல நாடுகள் ஆர்வம் காட்டின. எனினும் எந்த நாடும் அதனை வாங்க முன்வரவில்லை.

அண்மையில் மலேசியா 18 தேஜஸ் போர் விமானங்களை கொள்வனவு செய்வதற்கு முயன்றது. பின்னர் தென்கொரியாவிடம் சென்று விட்டது அந்த கொள்வனவு உடன்பாடு. தேஜஸ் போர் விமானத்தை ஏற்றுமதி செய்வதற்கு இந்தியா படாதபாடு படுகிறது. இந்தியா இப்போது பாதுகாப்புத் தளபாட உற்பத்தியை அதிகரித்திருக்கிறது. ஏற்றுமதியையும் அதிகரிக்க திட்டமிட்டுள்ளது.

எனினும், இந்தியாவின் பாதுகாப்புத் தளபாடங்கள் நவீனமயப்படுத்தப்பட்டவை அல்ல என்ற குற்றச்சாட்டுகள் இன்னமும் உள்ளன.

கடந்த 2ஆம் திகதி தொடக்கம் 4ஆம் திகதி வரை, சிங்கப்பூரில் ஷங்ரிலா பாதுகாப்புக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இலங்கையின் சார்பில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க பங்கேற்றிருந்தார்.

இந்தக் கருத்தரங்கில் பங்கேற்ற, சீன இராணுவத்தின் இராணுவ விஞ்ஞான அகடமியின் மூத்த கேணலான ஜாவோ ஜியாஜோ, இந்திய இராணுவம் சீன இராணுவத்துக்குச் சவால் விடுக்க கூடிய ஒன்று அல்ல என்று கூறியிருந்தார். அதற்கு அவர் முக்கியமாக குறிப்பிட்ட காரணம், இராணுவத்தின் நவீனமயமாக்கல் மற்றும் பாதுகாப்புத் தயாரிப்பு திறனில் சீனாவுக்குச் சவால் விடும் நிலையில், இந்தியா இல்லை என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.



சீனா பெரிய மற்றும் நவீன உற்பத்தி மையங்களை உருவாக்கியுள்ள நிலையில், இந்தியா பலவீனமான தொழிற்துறை உட்கட்டமைப்பு காரணமாக சீனாவுடன் போட்டியிடக் கூடிய நிலை இல்லை என்றும் கேணல் ஜாவோ ஜியாஜோ, கூறியிருந்தார். சீனாவிடம் நவீன ஆயுத தளபாட உற்பத்திக் கட்டமைப்புகள் உள்ளன என்பதை, மையப்படுத்தியே, அவர் அதனைக் குறிப்பிட்டிருந்தார்.

சீனாவின் நவீன ஆயுதங்களுடன் ஒப்பிடுகையில் இந்தியாவிடம் இருப்பவை தரம் குறைந்தவை தான்.

விடுதலைப் புலிகளின் வான் தாக்குதல் அச்சுறுத்தல் ஏற்பட்டவுடன், சீனாவிடம் இலங்கை சென்று விடக்கூடாது என்பதால் தான் இந்தியா, இந்திரா ரக ராடர்களை வழங்கியது. அது போலத் தான் இப்போதும் இலங்கையின் பாதுகாப்புத் தளபாட தேவைகளை நிறைவேற்றுவதற்கு சீனா தலையிட்டு விடக் கூடாது என்பதில் இந்தியா உறுதியாக இருக்கிறது.

அண்மையில் இலங்கைக்கு தெற்கே 900 கடல் மைல் தொலைவில், சீன மீன்பிடிக் கப்பல் மூழ்கியதும், இலங்கை கடற்படை உதவி வழங்கியது.

14 மீனவர்களின் சடலங்களை மீட்டுக் கொடுத்தது இலங்கை கடற்படை சுழியோடிகள் தான். இதற்கு நன்றி செலுத்தும் வகையில், சீன தூதரகம் இந்த வாரம் நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.


உதவிப் பணியில் ஈடுபட்ட விஜயபாகு போர்க்கப்பலில் பணியாற்றிய கடற்படையினர், பாதுகாப்புத் துறை அதிகாரிகள் அனைவரும் குறித்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

சடலங்களை மீட்டுக் கொடுத்த 9 கடற்படை சுழியோடிகளும் இந்த நிகழ்வில் சீனத் தூதுவரால் கௌரவிக்கப்பட்டனர். இது இலங்கை பாதுகாப்பு தரப்புடன் சீனாவுக்கு உள்ள உறவுகளை மேலும் வலுப்படுத்தியிருக்கிறது. இவ்வாறான உறவுகள் பலமடைவது இந்தியாவுக்கு கவலை தரும் ஒரு செய்தி.


இது போன்ற விடயங்களைக் கவனத்தில் கொண்டு தான் பாதுகாப்பு கருத்தரங்கு மற்றும் கண்காட்சியை கொழும்பில் ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வின் ஊடாக இந்தியாவின் பாதுகாப்புத் தளபாடங்களை இலங்கை கொள்வனவு செய்யும் நிலை உருவாகலாம். ஆனால் அது சீனத் தயாரிப்புகளின் அளவுக்கு நவீனமானதாக இருக்குமா என்ற கேள்வி நீடிக்கவே செய்யும்.


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! ஒவ்வொரு முடிவு எடுக்கும் போதும் பல முறை சிந்தித்து செயல்படுங்கள். பூர்வீக சொத்துகளால் பிரச்சனைகள் வந்து போகும். சுபச் செலவு எதிர்பாராமல் வந்து கொண்டே இருக்கும். கார்களில் செல்லும் போது சீட் பெல்ட் அவசியம் அணிந்து கொள்ளவும். உங்கள் குடும்பத்திற்கு ஆன்மீக அன்பர்களின் வழிகாட்டுதலும், ஒத்துழைப்பும் கிடைக்கும். பொதுவாக இவ்வாரம் இறைவழிபாடு செய்வது நன்மை தரும்.





ரிஷபராசி அன்பர்களே! நிதானமாகவும், பொறுமையாகவும் இருக்க வேண்டிய காலமிது. மறைமுக எதிரிகளால் ஏற்படும் ஒவ்வொரு பிரச்னையும் உங்களுக்கே நன்மையை கொடுக்கும். குடும்பத்தில் யாருக்கும் வாக்கு கொடுக்காமல் தவிர்க்கவும். அரசாங்க வழிகளில் ஒத்துழைப்பு கிடைக்கும். உஷ்ண சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், கண் பிரசச்னைகள் வந்து போகும். புத்திரர்கள் இடத்தில் கவனத்தை செலுத்த வேண்டிய காலகட்டமிது.





மிதுனராசி அன்பர்களே! எண்ணத்தில் தெளிவும், உள்ளத்தில் உற்சாகமும் இருக்கும். சுப காரியங்களை முன்னின்று செய்வீர்கள். விடுபட்டு போன பழைய சொந்தம் மீண்டும் மலரும். புத்திர வழியில் மகிழ்ச்சியான செய்திகள் கிடைக்கும். முகத்தில் பொலிவும், புத்துணர்ச்சியும் இருக்கும். குடும்பத்தில் நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த பூர்வீக சொத்துக்களின் பிரச்சனைகள் நீங்கும். புத்திர வழிகளில் புகழும் செல்வாக்கும் கிடைக்கும்.





கடகராசி அன்பர்களே! சிந்தனையும், செயலும் மேம்படும். ஒவவொரு காரியமும் உங்களுக்கு வெற்றியை கொடுக்கும். புது வாகனங்கள் அமையும். சாதாரண விஷயங்களுக்கு கூட தந்தையுடன் கருத்து வேறுபாடு வரலாம். குடும்பத்தில் மனைவி வழியில் உள்ள உறவினரின் திருமண காரியங்களுக்கு உதவி செய்யும் சூழ்நிலை ஏற்படும். சகோதர வழியில் உதவிகள் கிடைக்கும். அந்நிய தேசத்தில் இருந்து வரும் நல்ல செய்தி மனமகிழ்வைத் தரும்.





சிம்மராசி அன்பர்களே! எதிர்பார்த்த இடங்களிலிருந்து நல்ல செய்தி வரும். உங்கள் பணம் உங்களிடம் வந்து சேரும். எந்த சந்தர்ப்பத்திலும் கோபமாகாமல் தேவையற்ற பேச்சுகளை குறைப்பது நன்மையை தரும். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். குல தெய்வ வழிபாட்டால் நற்பலன்கள் ஏற்படும். மன தைரியம் உண்டாகும். வாழ்க்கைத் துணையால் லாபங்கள் ஏற்படும்.




கன்னிராசி அன்பர்களே! தடுமாற வைக்கும் சோதனைகள் கூட உங்களின் தெய்வ பக்தியால் பகலவனை கண்ட பனி போல் விலகி விடும். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும், வாழ்க்கைத் துணையால் லாபங்கள் ஏற்படும். தந்தையின் உடன் பிறந்தோரால் நல்ல செய்தி கிடைக்கும். புத்திரர்களால் சில சங்கடங்களை சந்திக்க நேரிடும். எதிர்பாராத தன லாபம் கிடைக்கும். அரசு வேலை எதிர்பார்த்தவர்களுக்கு நல்ல செய்தி கிடைக்கும்..





துலாம்ராசி அன்பர்களே! உங்கள் வாழ்க்கைத் துணை உங்களுக்கு எப்போதும் ஆதரவாக இருப்பார். தந்தையின் உடல்நிலையில் கவனம் செலுத்த வேண்டிய நேரமிது. குடும்ப ஒற்றுமையில் சிறு சலனங்கள் ஏற்படலாம். அதனால் கவனமுடன் நடக்கவும். குடும்ப உறுப்பினர்களை கண்டிக்கும் போது தேவையில்லாத வார்த்தைகளை பயன்படுத்தாமல் நிதானமாக பேசவும். அடிக்கடி மனக் குழப்பங்கள் வந்து மறையும். உங்களின் அன்பான அணுகுமுறையால் எல்லாரையும் திருத்தி விடுவீர்கள்.





விருச்சிகராசி அன்பர்களே! எந்த சூழ்நிலையிலும் மன உறுதியுடன் செயல்படுவீர்கள். நீண்ட நாட்களாக வராமல் இருந்த நல்ல செய்தி வந்து சேரும். குடும்பத்தில் அமைதி நிலவும். வாழ்க்கைத் துணையிடம் கருத்து வேறுபாடுகள் வந்தாலும் பின்பு உங்கள் மனதை புரிந்து கொண்டு சமாதானம் ஆகி விடுவார். உத்யோகஸ்தர்கள் சவால் மிகுந்த வேலைகளை முடித்து மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவர். தொழில் துறையினருக்கு மந்தமான காலம்








தனுசுராசி அன்பர்களே! எந்த காரியத்திலும் அவசரமும் படபடப்பும் இல்லாமல் செயல்படவும். மங்கல காரியங்கள் நடக்கும். நீங்கள் நேர்மையாக பேசும் பேச்சு சிலருக்கு பிடிக்காமல் போகாலாம். இடம், பொருள் பார்த்து பேசுவது நல்லது. தாயாரின் உடல் நிலையில் கவனமாக இருக்கவும். புத்திர வழியில் மதிப்பும், செல்வாக்கும் உண்டாகும். சில நேரங்களில் தாயாரின் சொல் புண்படுத்தக் கூடும். கவலை கொள்ள வேண்டாம்.




மகரராசி அன்பர்களே! மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் அதிகரிக்கும். வழக்குகள் சார்ந்த எதிலும் சற்று கூடுதல் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் சில சங்கடங்கள் வந்தாலும் உங்கள் சாமர்த்தியத்தால் எதையும் சமாளித்து விடுவீர்கள். கடன் பிரச்னை படிப்படியாக குறையும். புத்திரர்களின் செயல்பாடுகளை கண்ணும் கருத்துமாக கவனிக்க வேண்டிய நேரம். அவர்களின் செயல்பாடுகள் உங்களுக்கு சங்கடத்தை தரலாம்.




கும்பராசி அன்பர்களே! தடைப்பட்டுப் போயிருந்த காரியங்கள் எல்லாவற்றையும் வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். உங்கள் இல்லங்களில் சுபமான நிகழ்ச்சிகள் இனிதே நடைபெறும். சில சமயங்களில் அசாத்திய தைரியத்தால் சில முடிவுகளை எடுப்பீர்கள். அது உங்களுக்கே பாதகமாகி விடும். அதனால் நிதானமாக இருப்பது நன்மையாகும். குடும்பத்தில் திருமணமாகாதவர்களுக்கு நல்ல வரன் அமையும்.




மீனராசி அன்பர்களே! எந்த காரியத்தையும் அவசரமும் படபடப்பும் இல்லாமல் செயல்படவும். எதிர்பாராத செலவுகளுக்கு வாங்கிய கடன்களால் மனச்சங்கடங்களுக்கு ஆளானாலும் உங்களின் நாணயமான குணத்தினால் சமாளித்து விடுவீர்கள். குடும்பத்தில் வாழ்க்கைத் துணையிடம் கருத்து வேறுபாடு வரும் சூழ்நிலை உருவாகும். கவனமுடன் இருக்கவும்.தந்தை வழி உறவினர்கள் மறைமுகத் தொல்லைகள் கொடுப்பார்கள்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# ராஜபக்ஷாக்களின் எதிர்கால அரசியல்....

(19ம்பக்கத் தொடர்ச்சி) வைத்திருப்பது ஏதோ தங்கள் பிறப்புரிமை என்ற சிந்தனையில் அவர்கள் நடந்து கொண்டார்கள். ஆட்சிமுறை தொடர்பிலான முக்கிய தீர்மானங்களை சகோதரர்கள் மாத்திரமே ஒன்று கூடி எடுத்தார்கள். அதன் விளைவே நாட்டின் இன்றைய அவல நிலை. ஊழல் மோசடி, அதிகார துஷ்பிரயோகம், சட்டத்தின் ஆட்சி சீர்குலைவு மற்றும் குடும்ப அரசியல் ஆதிக்கம் என்று ஆட்சி முறையின் கெடுதியான போக்குகள் சகலவற்றையும் உருவகிப்பவர்களாக ராஜபக்சாக்கள் விளங்கினார்கள். இந்த நூற்றாண்டின் இதுவரையான இரு தசாப்தங்களுக்கும் அதிகமான காலப்பகுதியில் கூடுதல் வருடங்கள் அவர்களே அதிகாரத்தில் இருந்தார்கள்.

2005 தொடக்கம் இதுவரையான 18 வருடங்களில் இடையில் ஒரு நான்கு வருடங்களைத் தவிர மிகுதி காலப்பகுதியில் நாடு அவர்களின் ஆட்சியிலேயே இருந்தது. மகிந்த ராஜபக்ச 11 வருடங்கள் நிதியமைச்சராகவும் பதவி வகித்த அதேவேளை பசில் ராஜபக்ச பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக பதவி வகித்தது மாத்திரமல்ல, கோட்டாபய ஆட்சியில் இறுதியாக நிதியமைச்சராகவும் இருந்தார். அதனால் வங்குரோத்து நிலைக்கு நாட்டை இட்டுச்சென்ற தவறான பொருளாதார முகாமைத்துவத்தை பொறுத்தவரை ராஜபக்சாக்களுக்கே முக்கிய பொறுப்பு இருக்கிறது.

இவ்வாறாக சகல முனைகளிலும் நாட்டை படுமோசமான நிலைக்கு கொண்டு வந்து விட்டு தங்களுக்கு இருக்கும் பொறுப்புக்கூறல் கடப்பாட்டை அலட்சியம் செய்துகொண்டு மீண்டும் அதிகாரத்துக்கு வருவது குறித்து கனவு காணும் அவர்கள் இனிமேல் தங்களால் எதைச் சாதிக்கமுடியும் என்று நம்புகிறார்களோ தெரியவில்லை. ராஜபக்சாக்களை பொறுத்தவரை, மீண்டும் அதிகாரத்துக்கு வர வேண்டும் என்ற பேராசை ஒருபுறமிருக்க, கடந்த கால தவறுகளுக்காக தங்களை பொறுப்புக் கூற வைக்கக் கூடிய ஒரு அரசாங்கம் பதவிக்கு வராமல் இருப்பதை உறுதிசெய்வதும் கூட முக்கியமானது. நாட்டு மக்களின் மனநிலையையும் பொருட்படுத்தாமல் அந்த குடும்பத்தின் எதிர்கால வியூகங்கள் அந்த நோக்கிலேயே அமையும்

# மதச் சுதந்திரம்:- ஞானம் பெறும் தருணம்

(7ம் பக்கத் தொடர்ச்சி) அப்போதெல்லாம், 'இதனைக் கட்டுப்படுத்த வேண்டும்' என்ற வேகம் அரச இயந்திரத்திற்கு ஏற்பட வில்லை. அதற்கான காரணத்தையும் மக்கள் அறியாத வர்களல்லர். கடந்த காலத்தில் இலங்கையில் இனவாதம் பேசிய சிங்கள அரசியல்வாதிகள் மதச் சிறுபான்மையினரை நோக்கி வெறுப்புப் பேச்சுக்களை மட்டுமன்றி வன்முறைகளையும் தூண்டி விட்ட கடும்போக்கு செயற்பாட்டாளர்களை நோக்கி சட்டம் இதே வீச்சில் அப்போது பாய்ந்திருந்தால். இப்போது ஜெரோமுக்கும் நடாசாவுக்கும் பௌத்த மதத்தை கொச்சைப்படுத்தும் தைரியம் வந்திருக்காது.

இலங்கையில் நடக்கின்ற ஒவ்வொரு நகர்வுக்குப் பின்னாலும் ஒரு உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் நிகழ்ச்சி நிரல் இருந்தது, இருக்கின்றது. 2010ஆம் ஆண்டுக்குப் பின்னரான இனவாதமும் 2019ஏப்ரல் பயங்கரவாதமும் எந்த நோக்கத்தை கொண்டவை என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். அதுபோல, ஜெரோம்கள், நடாஷாக்களுக்கு பின்னாலும் மறைகரங்கள் இருக்கலாம் என்பது உண்மைதான்.

ஆயினும், ஏற்கனவே அரசியலமைப்பில் உள்ள இன, மத உரிமைகளும் சிவில் சட்டங்களில் உள்ள ஏற்பாடுகளும் கடந்த காலங்களில் நேர்மையான முறையில் பக்கச்சார்பின்றி நடைமுறைப்படுத்தப்பட்டி ருந்தால், இன்று ஏற்பட்டிருக்கின்ற நிலை தோன்றி யிருக்காது. புதிய சட்ட ஒன்றின் நிர்ப்பந்தமும் உணரப்பட்டிருக்காது என்பதையே இந்தப் பத்தி உரைக்க விளைகின்றது. ஆனால், அதனைச் செய்யத்தவறிய பெருந்தேசியமும் அரசாங்கங்களும் இப்போது மட்டும் என்றுமில்லாத அக்கறையை வெளிப்படுத்துகின்றமை பல கேள்வி களைத் தோற்றுவிக்கின்றது. புதிய சட்டத்தை கொண்டு வந்தோ அல்லது தற்போதுள்ள சட்டங்களின் மூலமோ மதச்சுதந்திரம் எல்லா மதங்களுக்கும் சமமாக உறுதிப் படுத்தப்படுமா என்பது தான் முதன்மைக் கேள்வியாகும். உண்மையிலேயே சட்டங்கள் இல்லாத பற்றாக்குறை நிலை என்பது இலங்கையில் இல்லை. மாறாக, பல்லின மக்கள் நல்லிணக்கத்துடனும் சுதந்திரமாகவும் வாழ்வதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் ஏற்கனவே எழுத்தில் உள்ளன. எனவே இங்குள்ள பிரச்சினை சரிவர அவற்றை அமுல்படுத்துவதாகும்.

எனவே முறையான அமுலாக்கத்திற்கான அடிப்படையை உறுதிப்படுத்தாமல் புதிதாக சட்டமொன்றை கொண்டு வருவதால் மட்டும் இலங்கைச் சூழலில் எந்த அர்த்தமுள்ள மாற்றமும் ஏற்பட்டு, இன - மத நல்லிணக்கம் உறுதிப்படுப் படுத்தப் பட்டு விடும் என்று கண்ணை மூடிக் கொண்டு நம்பிக் கொண்டிருக்க முடியாது. அதற்கு காத்திரமான நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும். அந்த வகையில், தற்போதைய அரசாங்கமானது ஏதோ ஒரு புள்ளியில், மதச் சுதந்திரத்தை உறுதிப் படுத்த வேண்டும் என்று திடசங்கற்பம் பூ ண்டிருக்கின்றமை மிகவும் மகிழ்ச்சியானதும், பாராட்டத்தக்கதுமாகும். காலம் கடந்த இந்த ஞானம், நேர்மையுடனும் நடுவுநிலையுடனும் நிலைபெறுமாக இருந்தால் நாடு நலம் பெறும்.

# இந்தியாவின் புதிய பிரதமராக தமிழர்?

(5ம் பக்கத் தொடர்ச்சி) உரிய விளக்கம் அளிக்கப்படும். பிரதமர் மோடி மீது அமித் ஷாவுக்கு என்ன கோபம் எனத் தெரியவில்லை. 2024ம் ஆண்டில் பாஜகவின் பிரதமர் வேட்பாளராக தமிழர் வர வேண்டும் என்ற எண்ணம் இருந்தால், தமிழிசை சவுந்தரராஜன், எல்.முருகன் ஆகியோர் உள்ளார்கள். ஒரு வேளை இவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கலாம் என்று நான் நினைக்கிறேன்.'' என்றார்.

இந்த நிலையில், தமிழகத்தில் இருந்து தேர்வு செய்யப்படும் பிரதமர் வேறு யாரும் இல்லை பிரதமர் மோடிதான் அவர் எனவும் ஒரு சாரார் தெரிவித்து வருகின்றனர். தமிழகத்தில் இருந்து பிரதமர் தேர்வு செய்யப்பட வேண்டும் என்று அமித் ஷா கூறியது பிரதமர் மோடியை மனதில் வைத்துகூட இருக்கலாம் எனவும் கலாய்த்து வருகின்றனர்.

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
12வது ஆண்டு இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
29 ஒக்டோபர் 2023 ஞாயிறுக்கிழமை
தொடர்புகளுக்கு:- 416 841 9600

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com



மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6




RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)




TAX CENTRIC
Gayatiri Thavan
Tel: 289.569.0169 • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
www.taxcentric.ca
2338 HURONTARIO ST., UNIT 100A, MISSISSAUGA, ON L5B 1N1
உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்
Tel: 289.569.0169
Servicing Clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph
Personal Tax
Corporate Tax
Book Keeping & Accounting
Payroll Services
GST/HST Filing
Corporate Services
Business Startup
Financial Planning




OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*




RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500




உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.